Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி - 11 | 26-06-2003 | வியாழக்கிழமை | ஓசை 128




# தமிழரின் ஒரேகுரலாக ஒலிக்கப்போகும்

# யாழ். இல் நடைபெறும் பொங்கு தமிழ்

## குடாநாடு எங்கும் எழுச்சிக்கோலம் இலட்சக்கணக்கான மக்கள் திரள்வர்

**"உயர்ந்தவர்கள் நாமெல்லாம் உலகத்தாய் வயிற்று மைந்தர்கள். நசிந்து இனிப் போகமாட்டோம். நாமெல்லாம் இனி நிமிர்ந்து நிற்போம்" என ஒருமித்த குரலில் யாழ். மக்கள் கூடி யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவிருக்கும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வை எழுச்சியுடன் கொண்டாடவுள்ளனர். இதற்கென குடாநாடு தற்பொழுது விழாக்கோலம் பூண்டுள்ளது.**

தமிழர்தாயகத்தில் சிங்களப் படைகளின் ஆக்கிரமிப்பையும் அவர்களால் ஏற்படுத்தப்பட்டுவரும் நெருக்குவாரங்களையும் எதிர்ப்பதுடன் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு வெளிப்படுத்தும் கண்டனக் குரலாகவும் இப் பொங்குதமிழ் நிகழ்வு அமைகின்றது.

ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கியத்துவம் மிக்க இக்காலகட்டத்தில் தமிழ் மக்களின் உரிமைகளையும் அபிலாசைகளையும் ஒருமித்த குரலாக வெளிப்படுத்தவுள்ள பொங்கு தமிழ் நிகழ்விற்கு அறைகூவல் விடுத்து யாழ் பல்கலைக் கழக மாணவர்களும், யாழ் தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்களும் யாழ் குடா நாடு எங்கும் தீவிர பரப்புரையில்

(08ம் பக்கம் பார்க்க)

## கொழும்பிற்கு கடத்தப்படவிருந்த சிறுவன் புலிகளால் மீட்பு

(மன்னார்)

மன்னாரில் இருந்து கொழும்புக்கு கடத்தப்பட இருந்த சிறுவன் ஒருவன் விடுதலைப் புலிகளால் மீட்கப் பட்டு போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினிடம் ஒப்படைத்த சம்பவம் ஒன்று மன்னாரில் இடம்பெற்றுள்ளது.

மன்னாரைச் சேர்ந்த மதுரை வீரன் என்ற மேற்படி சிறுவனைக் கடத்திய இருவர் பணத் தட்டுப்பாடு ஏற்பட்டவுடன் தாம் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் என்று கூறிப் பணம்

(08ம் பக்கம் பார்க்க)

## அரசாங்க முப்படைகளையும் பலப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை!

### சனாதிபதியின் பேச்சாளர் குற்றச்சாட்டு

நாட்டின் பாதுகாப்பை உறுதிப் படுத்த சனாதிபதி தீர்மானித்துள்ளதாக சனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

முப்படைகளைப் பலப்படுத்துவதற்காக அரசாங்கம் எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்றும் அவர் கூறுகின்றார்.

புலனாய்வுத் துறையினின் தகவல்களுக்கு அமைய விடுதலைப்புலிகள் யுத்தத்துக்கு தயாராவது உறுதிப் படுத்தப்பட்ட நிலையிலும் அரசாங்கம் எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்காது இருப்பதாக கரிம்பீரிஸ் குற்றம் சாட்டுகின்றார்.

விடுதலைப்புலிகள் யுத்தத்துக்குத் தயாராகி வருகின்றனர். அரசியல் கட்சியாக மாற்றமடையும் எந்த நடவடிக்கையும் தென்படவில்லை. அரசியல் அதிகாரங்களை யுத்தமொன்றின் மூலம் பறித்துக்கொள்வதற்கு ஆயுதபலத்தைப் பெருக்கி வருவது தெளிவாகப்

(08ம் பக்கம் பார்க்க)

## ஜப்பானியத் தூதுவர் 30 ஆம் திகதி கிளிநொச்சிக்கு விஜயம்

### புலிகளைச் சந்தித்துப் பேசுவார்

(கொழும்பு)

ஜப்பானியத் தூதுக்குழுவினர் இன்னும் சில நாட்களில் விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 30 ஆம் திகதி கிளிநொச்சியில் உள்ள அரசியல்துறை நடுவப் பணியகத்தில் இச்சந்திப்பு நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்காவில் உள்ள ஜப்பானியத் தூதுவர் தலைமையிலான குழுவினரே இச்சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவர்கள் தற்போது சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள தடங்கல் நிலை தொடர்பாக ஆராய உள்ளதுடன் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலை தொடர்பாகவும் ஆராயவுள்ளனர்.

## யாழ். பல்கலையைச் சூழ ராணுவ கெடுபிடி அதிகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

பொங்குதமிழ் நிகழ்வு நடைமுறை யாழ். பல்கலைக்கழகத்தை சிறிலங்காப் படையினர் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள் ளனர்.

நேற்று முன்தினம் இராணுவத்தின் ரோந்துப் பிரிவினர் பொங்குதமிழ் நிகழ்வு நடைபெற இருக்கும் யாழ்ப்பாண நகரப்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டதோடு மறித்து சோதனைக் கெடுபிடிகளையும் மேற்கொண்டனர் என்று யாழ். மனிதவுரிமைகள் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

### காரைநகர் தளம் மீது தாக்குதல்

## குற்றச்சாட்டின் பேரில் மரணதண்டனை தீர்ப்பு!

(கொழும்பு)

காரைநகர் கடற்படைத் தளம் மீது தாக்குதல் நடத்தி படையினரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் கருதப்பட்டவருக்கு உயர் நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது. சண்முகசுந்தரம் ரகுபதி அல்லது திலகர் என்பவருக்கே இவ்வாறு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு எட்டாம் மாதம்

(08ம் பக்கம் பார்க்க)

### - யாழ். மத்திய கல்லூரிப் பகுதியில் -

## வழமைக்கு மாறான வகையில் ராணுவசோதனை தீவிரம்!

(யாழ்ப்பாணம்)

யாழ் மத்தியகல்லூரி மற்றும் அதனை அண்டிய வீதிகளில் ராணுவத்தினர் வீதிப் பாதுகாப்பில் வழமைக்கு மாறாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களாக மிகவும் நெருக்கமாகவும் மரங்கள் மற்றும் உடைந்த கட்டடங்கள் கழிவுநீர் வாய்க்கால்கள், மதகுகள் என்பவற்றில் பதுங்கியிருந்து அவதானித்து வருவதுடன் அவ்வீதிகளில் அடிக்கடி செல்வோரை விசாரணைக்கும் உட்படுத்தி வருகின்றனர். இதனால்,இப்பகுதியில் நடமாடு வதற்கு இளைஞர் யுவதிகள் அச்சம் அடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (33)

## கொழும்பில் சுற்றிவளைப்புத் தேடுதல்; 43 தமிழ் இளைஞர்கள் கைது!

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தையடுத்து கொழும்பில் பல இடங்களிலும் பாரிய தேடுதல் வேட்டைகள் இடம்பெற்று வருவதாகத் கொழும்புத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரு வேறு இடங்களில் 43 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

நேற்று மட்டும் கொழும்பு தெஹிவளைப் பகுதியில் சிறிலங்காப் பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்புத் தேடு தலில் 28 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இதே வேளை, கடந்த திங்கள் இடம்பெற்ற தேடுதலில் கொட்டாஞ்சேனைப் பகுதியிலிருந்து 15 இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் வடபகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவருகிறது.

தெஹிவளை புலனாய்வுப் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரியைச் சுட்டுக் கொலை செய்ததாகச் சந்தேகிக்கப்படும் மதன் என்ற இளைஞன் தங்கியிருந்ததாகக் கூறப்படும் கொழும்பு கதிரேசன் வீதியில் அனைத்து விடு

(08ம் பக்கம் பார்க்க)

### - வல்வெட்டித்துறை மீன்பிடிப் படகுகள் மீதான -

## கடற்படையின் அடாவடித்தனம் கண்காணிப்புக் குழுவிடம் முறையீடு

வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர் மீன்பிடிப் படகுகள் மீது நேற்று முன்தினம் படையினர் மேற்கொண்ட அடாவடித்தனமான சோதனை நடவடிக்கை குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் சந்தித்த வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர்,செயலாளர், மற்றும் வல்வெட்டித்துறை கடற்றொழி லாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆகியோர் மேற்படி சம்பவம் தொடர்பாக அவர்களது அலுவலகத்தில் சந்தித்த

(08ம் பக்கம் பார்க்க)

## பிரதமரின் லண்டன் விஜயம் சந்தேகத்திற்குரியதொன்று!

### *சிஹல உறுமய கூறுகிறது*

பிரதமர் ரணிலின் பிரிட்டன் விஜயம் குறித்துப் பல விடயங்கள் தெளிவாக அறிவிக்கப்படவில்லையெனவும், இதனால் பிரதமரின் இவ்விடயம் குறித்துச் சந்தேகம் எழுந்துள்ளதாகவும் சிஹல உறுமைய கூறுகின்றது.

பிரதமரின் இவ்விஜயத்தின் மூலம் புலிகளுக்கு மேலும் பல நன்மைகள் கிடைத்துள்ளதாகவும் சிஹல (08ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### காணி விற்பனைக்கு

கிளிநொச்சி இரத்தினபுரம் பிரதான வீதியில் டிப்போச் சந்தியில் இருந்து 500 மீற்றர் தூரம் இராசையா கடையடியில் 2 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தொடர்புக்கு; இராசையா கடையடி (அருகாமை), இரத்தினபுரம், கிளிநொச்சி. (3347)

### வவுனியா ஒப்ரிக்கல்

கண் பரிசோதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடி 1/2 மணித்தியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வைத்தியத் துண்டுகளுக்கும் உடன் கண்ணாடி வழங்கப்படும். வவுனியா ஒப்ரிக்கல்-30, பஸ்நிலையம், வவுனியா.(3343)

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா., மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும் பல தரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3275)

### விற்பனை

LOVE BIRDS (குருவி)
முகவரி: இல82, D8 உருத்திரபுரம், கிளிநொச்சி. (3402)


# நிரந்தர சமாதானம் ஏற்படும்வரை அகதிகளைத் திருப்பி அனுப்பக் கூடாது

## பிரிட்டனிடம் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக் கோரிக்கை

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை பிரித்தானிய அரசு அகதிகளைத் திருப்பி அனுப்பக் கூடாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அகதி அந்தஸ்த்து நிராகரிக்கப்பட்ட வெளிநாட்டவர்களை உடனடியாகத் திருப்பி அனுப்ப பிரித்தானிய அரசு எடுத்த முடிவு குறித்து கருத்து தெரிவித்த போதே கூட்டமைப்பு உறுப்பினர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் தற்போது நிரந்தர அமைதி ஏற்படவில்லை எனவும் தொடர்ந்தும் சோதனைகள் மற்றும் கைதுகள் இடம்பெற்று வருவதாகவும் இதுகுறித்து கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதுவரை சந்தித்து பேசவுள்ளதாகவும் ஜோசப் பர ராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

# 19,150 குடும்பங்களே தென்மராட்சியில் குடியமர்வு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதிகளில் 2000 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம் பெற்ற யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த 23,149 குடும்பங்களில் இதுவரை 19,150 குடும்பங்கள் மட்டுமே மீளக் குடியமர்ந்துள்ளார்கள் என்று தென்மராட்சிப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தென்மராட்சிப் பிரதேச செயலகர் பிரிவில் மொத்தமாக 60 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளன. இதில் எழுதுமட்டுவாள் தெற்கு, எழுதுமட்டுவாள் வடக்கு, கரம்பன், தனங்களப்பு, மறவன்குளம், கைதடி நாவற்குளி ஆகிய ஆறுகிராம சேவையாளர் பிரிவுகளிலும் இன்னமும் மீளக்குடியமர முடியாத நிலையுள்ளது. இதனால் சுமாராக 1500 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவர்கள் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளிலுள்ள நலன்புரி நிலையங்களிலும் நண்பர்கள் உறவினர் வீடுகளிலும் எந்தவித வசதிகளுமின்றி மிகவும் அவலப்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (33)

# தருமபுரம் வைத்தியசாலை வளர்ச்சிக்கு காணிப் பற்றாக்குறை பெரும் பிரச்சினை!

(கண்டாவளை)

கிளிநொச்சி தருமபுரம் வைத்தியசாலை தற்போது ஏற்பட்டிருக்கும் சமாதானச் சூழ்நிலையால் பலவழிகளிலும் வளர்ச்சி அடைந்துவருகிறது. அண்மையில் அவசர நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக எடுத்துச் செல்வதற்கு யுனிசெவ் நிறுவனத்தால் அம்புலன்ஸ் வண்டி வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் கனிசமான நோயாளர் படுக்கை கட்டில்கள், குளிர்சாதனப்பெட்டி அடங்கலாக பல உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இவ்வைத்தியசாலைக்கு நோயாளர் விடுதிகள் கட்டுவதற்குப் பல உதவி நிறுவனங்கள் முன்வந்துள்ள நிலையில் இவ்வைத்தியசாலை வளாகத்தில் காணி பற்றாக்குறையாக உள்ளது.

கடந்த வருடம் இவ்வைத்தியசாலைக்கு பிரேத அறை கட்டுவதற்காக சுமார் 7 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டும் அக்கட்டடம் கட்டுவதற்கு பொருத்தமான இடம் இல்லாமையால் அப்பணம் திரும்பிச் சென்றது. மிகவும் கவலைக்குரிய விடயம். இவ்வைத்தியசாலைக்கு மேலும் சில ஏக்கர் காணி ஏற்கனவே ஒதுக்கப்பட்டு உள்ளபோதும் அக்காணிகளை தனியார் அத்துமீறிப் பிடித்துள்ளனர். எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வைத்தியசாலைக்கு ஒதுக்கப்பட்ட வரைபடத்திலுள்ள காணியைப் பெற ஆவன செய்யுமாறு வேண்டிய போதிலும் இதுவரையும் அதற்கான சாதகமான பதில் கிடைக்கவில்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

மாவட்டத்தின் சுகாதார உயர் அதிகாரிகள் இவ்வைத்தியசாலையின் குறைபாடுகளை அறிந்து அதற்கு ஏற்ப உதவி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு வைத்தியசாலைக்கு பல வசதிகளை ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (14)

# வெள்ளப் பாதிப்புக்குள்ளான குடும்பங்களிற்கு மானிய உதவி

(கண்டாவளை)

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில், 2002 இறுதிப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட 7 கிராமங்களைச் சேர்ந்த 100 குடும்பங்களுக்கு அழிவில் உள்ள வீடுகளைக் கட்டுவதற்கு ஒரு குடும்பத்திற்குப் 10 ஆயிரம் ரூபா மானியமாக வழங்கும், திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக 3500 ரூபா கண்டாவளைப் பிரதேச சமூக சேவைப் பகுதியினரால் அண்மையில் வழங்கப்பட்டது.

தருமபுரம் கிழக்கு, மேற்கு, கல்மடுநகர், புளியம்பொக்கணை, புதிய புன்னைநீராவி, பெரியகுளம்,பரந்தன் ஆகிய 7 கிராமங்களில் உள்ள மக்களுக்கே மானியம் வழங்கப்பட்டது. (14)

## - மாகாண கராத்தே சுற்றுப் போட்டி -
# கிளி. மாவட்ட வீராங்கனைகள் இருவருக்கு முதலிடம்

விளையாட்டு அமைச்சினால் நடத்தப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண கராத்தே சுற்றுப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வீராங்க னைகள் முதன் முதலாகக் கலந்துகொண்டார்கள்.

இதில் பங்குபற்றிய குருகுலத்தைச் சேர்ந்த வீராங்கனைகள் தமது திறமைகளை வெளிக்காட்டியுள்ளார்கள். இதில் 60 கிலோவுக்குக்கீழ் எடைப் பிரிவில் பங்குபற்றிய பி.கோமளாமேரி, 53 கிலோக்குக் கீழ் எடைப் பிரிவில் க.தனுசயந்தி ஆகியோர் முதலாம் இடங்களைப் பெற்றுக் கொண்டனர். அத்துடன் பெண்களுக்கான கராத்தே போட்டியில் 48 கிலோக்கு கீழ் எடைப் பிரிவில் பா.உஷாநிதி இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டார்.

இவர்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள இலங்கை தேசிய கராத்தே சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதற்குத் தகுதி பெற்றுள்ளனர். இதேவேளை ஆண்கள் பிரிவில் 65கிலோ பிரிவில் ம.அருள் ஜென்சன், 70 கிலோ பிரிவில் செ.இரகுநாதன், 75 கிலோ பிரிவில் செ.விஜயராஜ் ஆகியோர் மூன்றாம் இடங்களைப் பெற்றனர்.

## தமிழ்த் தினப் போட்டி

(பள்ளிக்குடா)

பூநகரி கோட்டப் பாடசாலைக்கு இடையிலான தமிழ்தினப் போட்டிகள் கடந்த வெள்ளி, சனி ஆகிய இரு நாட்களுக்கும் பூநகரி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கோட்டக்கல்வி அதிகாரி தி.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற போட்டிகளில் மொழித்திறன், இசை நடனம், நாட்டிய நாடகம் ஆகியவை இடம் பெற்றன.

## மக்கள் சந்திப்பு!

பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு மக்கள் சந்திப்பு நிகழ்வொன்று நேற்று முன்தினம் விசுவமடு பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

புதிய புன்னைநீராவி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் புன்னை நீராவி, பிரமந்தனாறு, குமாரசாமிபுரம், ஆகிய கிராமங்களும் அமைப்புக்களும் கலந்துகொண்டன. (14)

# தமிழர்களை பொலிஸில் பதிவு செய்யும் நடைமுறை குறித்து இவ்வாரம் முடிவாகும்

## கொழும்பு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர்

கொழும்பிலுள்ள தமிழர்களின் விபரங்களை அறிந்து கொள்வதற்கான முன்னைய பதிவு நடைமுறைக்கான விண்ணப்பப்படிவங்கள் எந்தவொரு பொலிஸ் நிலையத்திலிருந்தும் பொது மக்களுக்கு விநியோகப்படவில்லை. எனினும் எதிர்வரும் காலத்தில் தமிழர்களைப் பதிவதற்கான நடைமுறையைக் கொண்டுவர வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக பொலிஸ் தலைமை அலுவலகம் ஆராய்ந்து வருகிறது என்று, கொழும்பு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் போதி லியனகே தெரிவித்தார்.

தமிழர்கள் செறிந்து வாழும் கொட்டாஞ்சேனை, மட்டக்குளி, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, தெஹிவளை, கிராண்ட்பாஸ் போன்ற பகுதிகளிலுள்ள பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது இவ்வாறான விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டதாக கூறப்படும் செய்தியில் உண்மையில்லை என்று தெரிவித்தார். பொலிஸ் நிலையபதிற்குள்ளேயே வந்து பொலிஸாரைப் படுகொலை செய்யும் இந்த வேளையில் பதிவு முறை தேவை என்பதை உணர முடிகிறது. பதிவு முறை கொண்டு வந்தால தமிழர்கள் ஏன் பயப்பட வேண்டும் என்றும் தலைநகருக்குள் வரும் தமிழர்களின் விபரங்களை அறிந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக இந்த வாரம் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் கூறினார்.

# குமாரசாமிபுரத்தில் கிணறுகள் புனரமைப்பு

(கண்டாவளை)

விசுவமடுப் பிரதேசத்தில் உள்ள குமாரசாமிபுரம் கிராமத்தில் 77 விவசாயிகளுக்குக் கிணறுகள் புனரமைப்பு வேலைகள் மானிய அடிப்படையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் இயங்கும் சமுதாய முன்னேற்ற நிலையமும் சர்வதேசக் கெயர் நிறுவனமும் இணைந்து இப்புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்துள்ளன. (14)

## மேஜர் யாழிசையின் நினைவழியா நாட்கள்

தாயின்மடியில்
1972. 07 02.



தாயகமண்ணில்
1999 06 26

பராசசிங்கம் மங்கயற்கரசி
கரவெட்டி-யாழ்ப்பாணம்

விடுதலைக் கனவினை
விழியிடை வைத்தீர்
பருகளம் பகையழித்து
எமை இங்கு காத்தீர்.

இந்நாளில் வீரச்சாவடைந்த அனைவரையும் எம் நெஞ்சில் சுமந்தபடி அவர்களை நினைவுகூருகின்றோம்

போராளி.தம்பி (தங்கையா)
குடும்பத்தினருடன் சக
போராளிகளும்
(சி.8210)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

பூவாக
25 02 1975



விதையாக
26 06 1999

### மேஜர் ராஜன்
(நோபேட்)

(மரியநேசன் அன்றூ மாட்டின்)
விக்ரர் கவச எதிர்ப்பு அணி -இம்ரான் பாண்டியன் படையணி

போர்க்களத்தினிலே ராஜாவாய்
மனக் களத்தினிலே ரோஜாவாய்
உறவுகளுக்கு தேன்பாவாய்
வீரப்புலி மறவர்களுக்கு ராஜனாய்
வாழ்கின்றோம் உன் நினைவாய்.

இந்நாளில் வீரச்சாவடைந்த சகல மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

-குடும்பத்தினர்-
த.மு.-01 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

(சி-8211)

நி.மு:- வசாவிளான்,
கிழக்கு)
வசாவிளான்.

## அல்-கெய்தா எச்சரிக்கை!

ஆப்கான் மீது மற்றுமொரு தாக்குதலை நடத்தப் போவதாக அல்-கெய்தா தெரிவித்துள்ளதாக ஏ.பி. நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தி ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏ.பி. செய்தி நிறுவனத்திற்கு கிடைக்கப்பெற்ற அல்-கெய்தாவினால் மிக அண்மையில் வெளியிடப்பட்ட வீடியோ நாடா ஒன்றிலேயே இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## விசா மோசடி!

(வொஷிங்டன்)

அமெரிக்க விசாக்களை போலியாகத் தயாரித்த குற்றச் சாட்டின் பெயரில் அமெரிக்க தூதுவராலய அதிகாரி அலெக்ஸ் சாண்டர் இரண்டு வருட சிறைத்தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

நீதித் திணைக்களம் நேற்று முன்தினம் இத்தீர்ப்பை வழங்கியுள்ளது.

போலி விசாக்களை வழங்கிய அதிகாரி செக் நாட்டின் தூதுவராலயத்தில் துணை ஆலோசகராக கடமையாற்றியவர்.




நியூயோர்க்கில் சனாதிபதி தேர்தலுக்காக நிதி சேகரிப்பு மற்றும் ஆதரவு கோரும் நடவடிக்கையில் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஈடுபட்டுள்ளதையும், அவரின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மக்களையும் படங்களில் காண்க.

# சதாம் ஆதரவுப் படையினர் நடவடிக்கை; பிரிட்டிஷ் படை மீது இருவேறு தாக்குதல்!

### – அமாராவில் 6 படையினர் பலி; 7 பேர் காயம்

**ஈராக்கில் அமாரா பகுதியில் சதாம் ஆதரவு படையினர் நேற்று முன்தினம் நடத்திய இரு வேறு தாக்குதல்களில் ஆறு பிரிட்டிஷ் படையினர் பலியாகினர். மேலும் ஏழு படையினர் பலத்த காயங்களுக்குள்ளாகினர்.**

பஸ்ரா நகரிலிருந்து வடக்கே 200, கிலோ மீற்றர் தூரத்தில் இந்தத் தாக்குதல்கள் இடம் பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாவது தாக்குதலில் ஆறு பிரிட்டிஷ் படையினர் கொல்லப்பட்டனர். மற்றைய தாக்குதலில் ஏழு படையினர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

சதாமின் ஆட்சி கவிழ்ப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட அமெரிக்க பிரித்தானிய கூட்டுத் தாக்குதலில் மார்ச் 23ஆம் திகதிக்கு பின்னர் அதிகளவிலான இராணுவத்தினரை உயிர் பறித்துள்ள தாக்குதல் இதுவென கருதப்படுகிறது.

சதாமின் ஆதரவுப் படையினர் மேற்கொண்டு வருவதாக கருதப்படும் தாக்குதல்களில் இத் தாக்குதல் பாரிய ஒன்றாகவே கருதப்படுகிறது.

ஏப்ரல் 09 ஆம் திகதி தப்பியோடியதாகக் கூறப்படும் சதாம் ஹுசைனுக்கு ஆதரவான தாக்குதல் நேற்றுமுன்தினம் வரை ஓயவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## உரிமை கோரல்

கிரேக்க கடலில் தென்பட்ட மர்மக் கப்பலிலிருந்த 680 தொன் வெடிபொருட்கள் தமக்குரியன என்று சூடானில் உள்ள இரசாயன உற்பத்தி நிறுவனமொன்று உரிமை கோரியுள்ளது. இவை சமாதான தேவைகளுக்காக தருவிக்கப்பட்டவை என நிறுவனப் பேச்சாளர் இஸ்லாம் பக்லி காலிபா கூறினார். எனினும் இது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

## கொலம்பியாவில் மீட்கப்பட்ட வீடியோப் பேழை வெளியீடு

(வொஷிங்டன்)

கொலம்பியா விண் ஓடம் விபத்துக்குள்ளாவதற்கு முன்னர் அதில் பயணம் செய்த வீரர்கள் தோன்றும் வீடியோப் பேழை வெளியிடப்பட்டுள்ளது.

இதில் வீரர்கள் அனைவரும் பல்வேறு பணிகளில் ஈடுபடும் காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் தனது ஆய்வை முடித்துக் கொண்டு புமிக்குத் திரும்பிய கொலம்பியா விண்ஓடம் நடுவானில் பயங்கரமாக வெடித்துச் சிதறியது.

இக்கோர விபத்தில் பயணம் செய்த 07 வீரர்களும் உயிரிழந்தனர். பின்னர் கொலம்பியா ஓடத்தில் சிதைந்த பாகங்கள் அமெரிக்காவின் ஷெக்ஷாக் நகரில் ஆங்காங்கே கண்டெடுக்கப்பட்டன. அவற்றுள் விண்வெளி வீரர்கள் தோன்றும் வீடியோ பேழை முக்கியமானது ஆகும்.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளுக்கு இடையே இந்தப் பேழை வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஒளிப் பேழையில் இஸ்ரேல் வீரர் மனைவியுடன் தொலை பேசியில் பேசுவது, கல்பனா ஷவ்லா ஆவணங்களைச் சரிபார்ப்பது, அமெரிக்க வீரர் ஒருவர் முகச்சவரம் செய்வது போன்ற காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

# அமைதி வழி தீர்வுக்கு பயங்கரவாதிகள் தடையாகவுள்ளதை அனுமதிக்க முடியாது

### - அமெரிக்க சனாதிபதி அறிவிப்பு

(வொஷிங்டன்)

இந்திய-பாகிஸ்தான் பிரச்சினைகளுக்கு அமைதி வழியில் தீர்வு ஏற்பட பயங்கர வாதிகள் தடையாக இருப்பது அனுமதிக்க முடியாது என அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் கூறியுள்ளார்.

அமெரிக்க சனாதிபதியின் ஓய்விடமான ஹாம்டேவிட்டில் நேற்று முன்தினம் பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஸ் முஷாரப்புடன் சுமார் ஒன்றரை மணிநேரம் பேச்சு நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஜோர்ஜ் புஷ் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாகிஸ்தான் சனாதிபதியிடம் இந்திய பாகிஸ்தான் பிரச்சினைகளை அமைதி முறையில் பேசித் தீர்க்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையில் சம்பந்தப்பட்ட அனைவரும் முழுமையான ஈடுபாடு காட்ட வேண்டும் என்றும் தமது நம்பிக்கைகளை ஒரு சிலர் சீர்குலைக்க அனுமதித்து விடக் கூடாது என்றும் புஷ் கூறியுள்ளார்.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கவிருக்கும் 300 கோடி டொலர் உதவித்திட்டத்தில், அந்நாட்டிற்கு எவ்-16ரக விமானங்கள் வழங்குவது இடம் பெறாது என்றும் அவர் கூறியுள்ளார்.



கொங்கோவின் பணியா நகரில் இரண்டு சிறுவர்கள் மாம்பழம் உண்பதை பார்த்துக் கொண்டு செல்லும் பிரான்சிய ரோந்துப் படை வீரர்

## காங்கிரஸின் கண்டனம்

அயோத்திப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அகில இந்திய முஸ்லிம் தனிநபர் சட்டவாரியத்திற்கு காஞ்சி சங்கராச்சாரியார் அளித்துள்ள ஆலோசனை விபரங்களை மக்களுக்கு வெளிப்படையாக அறிவிக்க வேண்டும் என காங்கிரஸ் கோரியுள்ளது.

நேற்று முன்தினம் லக்னோவில் பேசிய இக்கட்சியின் அகில இந்தியச் செயலாளர், சுமோத்கான் ஷகாய், காஞ்சி சங்கராச்சாரியாரின் யோசனைகளுக்குப் பின்னால் மத்திய அரசு உள்ளது என்றும் இதன் மூலம் 04 மாநில சட்ட சபைத் தேர்தல்களில் அரசியல் ஆதாயம் தேட பா.ஜ. கட்சி முயற்சிப்பதாகவும் கூறியுள்ளனர்.

# இந்தியா – சீனா எல்லைப் பிரச்சினைக்கு தீர்வுகாண சிறப்புக் குழு அமைக்க முடிவு

(புதுடில்லி)

இந்தியா-சீனா இடையேயுள்ள எல்லைப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வுகாண இருநாடுகளும் சிறப்புப் பிரதிநிதிகளை நியமிக்க முடிவு செய்துள்ளன.

இந்தியத் தரப்பில் சிறப்புப் பிரதிநிதியாக நாட்டின் பாதுகாப்பு ஆலோசகர் பிரஜேஷ் மிஸ்ராவும் சீனத்தரப்பில் அந் நாட்டின் வெளியுறவுத்துறை மூத்த அமைச்சர் வின்கோவும் இருப்பார்கள் என நேற்று முன் தினம் பெய்ஜிங்கில் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங்ஹா கூறியுள்ளார்.

திபெத் சுயாட்சி பிராந்தியம் பற்றி இந்தியாவின் நிலையில் மாற்றம் எதுவுமில்லை என்று தெரிவித்த ஜஸ்வந்த் சிங்ஹா இது சீனாவின் ஒரு பகுதி என்பதே இந்தியா அங்கீகரிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்திய மண்ணில் சீனாவுக்கு எதிராக திபெத்தியர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

அதேநேரத்தில் திபெத்திய மதத் தலைவர் தலாய்லாமா இந்தியாவில் இருந்து வெளியேறும் கேள்வியே எழவில்லை என்றும் கூறியுள்ளார்.

## அயோத்தியில் கோயில் கட்ட சட்டம் வரின் மக்கள் ஆதரவுண்டு!

### – விஸ்வஹிந்து பரிசத்

(புதுடில்லி)

அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்கு சட்டம் கொண்டுவர துணைப் பிரதமர் எல். கே. அத்வானி முன்முயற்சி மேற்கொண்டால் அதற்குப் பெரும்பாலான மக்கள் ஆதரவு கிடைக்கும் என்று விஸ்வஹிந்து பரிசத் தலைவர் அசோக்சிங்கால் கூறியுள்ளார்.

இதற்குரிய சட்டத்தைக் கொண்டு வர மத்திய அரசால் இயலாது போனால் பதவியிலிருந்து விலகி மக்களின் புதிய தீர்ப்பைப் பெற வேண்டும் என்று நேற்று முன்தினம் ராஜ்பூரில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறியுள்ளார்.

ராமர் கோயில் விவகாரத்தில் இனி பிரதமர் வாஜ்பாயை நம்பிப் பயனில்லை என்பதால் துணைப் பிரதமர் அத்வானி மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்புவதாக அவர் கூறியுள்ளார்.



பிலிப்பைன்ஸின் மணிலாவுக்குத் தெற்கே பாலயன்ஞகில் மதக் கொண்டாட்டத்தின் போது பாரம்பரிய உடை அணிவிக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்ட தீயில் வாட்டப்பட்ட பன்றிகள்

# மத்திய கிழக்கில் சமாதானம் கிட்டும்...?

மத்திய கிழக்கு சுமார் கடந்த 03 வருடங்களாக கொந்தளித்துக் கொண்டுதான் இருக்கின்றது. இந்த கொந்தளிப்பு தொடர்வதும் மறைவதும்தான் கடந்த காலங்களில் தொடர் சம்பவங்களாக இருந்தன. ஆனால் தற்போதைய நிலையில் கொந்தளிப்பு உச்சம் பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்று கூறும் அளவிற்கு மோதல்களும், உயிர் பலிகளும் தொடர்ந்த வண்ணமிருக்கின்றன என்றால் மிகையாகாது.

தொடரும் மோதல்களால் அமெரிக்க



பலஸ்தீன ஜனாதிபதி யஸீர் அரபாத்

சனாதிபதி மத்திய கிழக்கில் ஏற்படுத்த முனைந்த "(Road map) வீதி படவரைபு" எனும் சமாதானம் தான் கேள் விக் குறியாகி, சமாதானம் ஏற்படுமா என்பது ஊசலாடிக் கொண்டிருக்கின்றது என்பதே கண் கூடாக உள்ளது.

அத்துடன் ஜெருசலேம், காஸா பகுதி களில் ஏற்படும் தொடர் மோதல்கள் அமெ ரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ்சை தான் அதிர வைத்திருக்கின்றன என்றும் எதிர் பார்க்கப் படுகின்றது.

ஜோர்தானில் அ.்.பாவில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட அமெரிக்க சனாதிபதி இஸ்ரேலியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதாகவும். பலஸ்தீனர்களுக்கான உரிமைகளை 2005ஆம் ஆண்டிற்குள் ஏற்படுத்திக் கொடுப்பதாகவும், அதற்காகவே "வீதி வரை படம்" எனும் சமாதானத் திட்டத்தை உருவாக்கியிருப்பதாக உறுதி கூறிய மறுகணம்,

மத்திய கிழக்கில் அங்கங்கே மோதல்கள், குண்டு வைப்புக்கள்,... என மத்திய கிழக்கு அதிர்ந்ததோ இல்லையோ அமெரிக்க சனாதிபதியின் சமாதானத் திட்டம் அதிர்ந்தது என்னமோ உண்மைதான்.

ஈராக் யுத்தத்தால் ஆட்டம் காணும் தனது ஸ்திர நிலையை வலுச் சேர்ப்பதற்காகவே புஷ் அண்மையில் எகிப்து, ஜோர்தான் ஆகிய நாடுகளுக்கு தனது சமாதானத் திட்டத்தைக் கொண்டு சென்றதாகவும் மறுபுறம் பலஸ்தீன பிரதமர் மஹ்மூத் அப்பாஸ் இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோன் ஆகியோரையும் சந்தித்ததனூடாக தனது சமாதான நடவடிக்கையை உலகுக்கு வெளிப்படுத்தியதாகவும் கூறப்படுகின்றது.

இம்மாநாட்டிலேயே பலஸ்தீன தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்துவதாக பலஸ்தீன பிரதமர் அப்பாஸும், யூதக்குடியிருப்புகளை அப்புறப்படுத்துவதாக இஸ்ரேலிய பிரதமரும் வாக்களித்ததாக புஷ் ஆனந்தத்தில் கூத்தாடியது அன்று மட்டுமாகக் கூட இருக்க முடியும்.

ஏனெனில், மாநாடு ஜூன் 04ஆம் திகதி நடைபெற்றது. அன்றைய நாளிலிருந்து நேற்று முன்தினம் வரை இஸ்ரேலியர்களும் பலஸ்தீனர்களுமாக எழுபதிற்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர்.

இதிலிருந்து புலப்படுவது ஒன்றுதான் அமெரிக்க சனாதிபதியின் வீதி வரை படம் எனும் சமாதானத்தை விரும்பாதவர்கள் தான் அதிகமாகவுள்ளனர் என்பதே.

மறுபுறம் அதிரும் தாக்குதல்களினால் பொறுமையிழந்த புஷ், இத்தகைய தாக்குதல்கள் பலஸ்தீன தீவிரவாதத்தை ஒடுக்க பிரதமர் அப்பாஸுக்கு உதவாது என்றும். இஸ்ரேலின் சொந்தப் பாதுகாப்பையும் இது பாதிக்கும் என்றும் எரிச்சல்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

அதேநேரம் தொடரும் ஜெருசலேம் தாக்குதல்களால், ஹமாஸ் ஒரு பயங்கரவாத இயக்கம் என்றும் ஜோர்தான் உச்சி மாநாட்டின் பின்னரான புதிய வன்முறைகளுக்கு ஹமாஸே காரணம் என்றும் அமெரிக்க சனாதிபதி குற்றப்பட்டியலிட்டுள்ளார்.

இதேபோல் பிரச்சினைக்குரியவர்கள் பலஸ்தீன அதிகார சபையினரோ அல்லது இஸ்ரேலியர்களோ அல்ல ஹமாஸ் இயக்கம் தான் பயங்கரவாதத்தில் ஈடுபடுகின்றது என்று வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஏரிபிளைச்சரும் தனது பங்கிற்கு குற்றம் சாட்டியுள்ளார்.

ஆரம்பத்தில் ஹமாஸ் தலைவர் தாக்கப்பட்ட போது தாம் குழப்பமடைந்துள்ளதாகவும், தனது இரங்கலையும் வெளியிட்ட அமெரிக்க சனாதிபதிதான், இன்று ஹமாஸ் ஒரு சமாதானத்திற்கு எதிரான பயங்கரவாத அமைப்பு என முன்னுக்குப் பின்னான முரண்பட்ட கருத்தையும் கூறியிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

ஏனெனில், அமெரிக்காவில் யூத சக்திகள்



புஷ்சுடன் எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்

தான் அதிக பலத்துடன் இருக்கின்றன. அவர்களை குளிர்வித்தால் மட்டுமே 2004 தேர்தலில் புஷ் மீண்டும் சனாதிபதியாகும் வாய்ப்பு கிட்டலாம்.

அதனால் இஸ்ரேல் மீது வசைபாடுவதோ எச்சரிக்கை விடுவதோ அமெரிக்கவிலுள்ள யூதர்களைப் பாதிக்கும். அது புஷ்ஷின் சனாதிபதித் தேர்தலைப் பாதிக்கும்.

எனவே தொடர் சங்கிலியாய் நீளும் இப் பிரச்சினைகளால் தான் புஷ் இஸ்ரேலின் கண்மூடித்தனமான தாக்குதல்களை பார்த்தும் கண்ணிருந்தும் குருடராய் இருக்கிறார் என அவதானிகளிடையே வலுப்படும் உண்மையாகும்.

அத்துடன், அமெரிக்கா, ரஷ்யா, ஐ.நா. பாதுகாப்புச் சபை, ஐரோப்பிய ஒன்றியம் என்பன இணைந்து முன் வைத்த சமாதானத் திட்டத்தை இஸ்ரேல் உடனடியாக ஒன்றும் ஏற்றுக் கொண்டுவிடவில்லை. 15 நிபந்தனைகளுடனேயே ஏற்றுக் கொண்டது.

ஆனால் இஸ்ரேலிய வலதுசாரிகள், தீவிரவாத போக்குள்ள இயக்கங்கள் அனைத்தும் எதிர்ப்பு குரல்தான் கொடுத்தன. அதனை புஷ் காதில் வாங்கிக் கொள்ள வில்லை.

மறுபுறம் பலஸ்தீனம் சமாதானத்தை ஏற்பதாகவும். தீவிரவாதத்தை அடக்குவதாகவும் சமாதான முயற்சிக்கு ஆமோதித்ததை ஏனோ பலஸ்தீன தீவிரவாதிகள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதுடன், தமது எதிர்ப்பை வெடிகுண்டுத் தாக்குதல்கள் மூலம் வெளிப்படுத்தினர் என்றும் கூறப்படுகின்றது.

ஏனெனில் ஜோர்தான் உச்சி மாநாட்டில் வெளிநாடுகளில் தஞ்சம் கோரியிருக்கும் 40 இலட்சம் பலஸ்தீன அகதிகளின் நிலைமை குறித்து பேசப்படாமையும் இவர்களின் எதிர்ப்புக்குக் காரணம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தமது பிரச்சினைகள் தீர்க்கப்படாமல், வெறுமனவே கைகளிலுள்ள ஆயுதத்தைக் கீழே போடுங் கள் என்பது ஏற்கக் கூடிய ஒன்றல்ல என்று தமது அதிருப்தியை அவர்கள் வெளிக் காட்டுவதாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன், இஸ்ரேல் தொடரும் ஆக்கிரமிப்பினால் இஸ்ரேலியர்களைவிட்டு எம்மீது மட்டும் பழி சுமத்துவது நியாயமானது அல்லவே என பலஸ்தீன சனாதிபதி யஸிர் அரபாத்தின் ஆலோசகர் கூறியுள்ளார்.

இஸ்ரேலியர் மீதான தாக்குதலை நிறுத்தவும், ஹமாஸ் இயக்கத்தைக் கட்டுப்படுத்தவும் உதவுமாறு அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல், எகிப்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

ஆனால், எகிப்தோ இரண்டு பகுதி சண்டையில் ஒரு பகுதியைக் கட்டிவைப்பது நியாயமல்ல எனும் விதமாய், முதலில் பலஸ்தீனர் மீது இஸ்ரேல் நடத்தும் கண்மூடித்தனமான தாக்குதலை நிறுத்தச் சொல்லுங்கள் என்று கூறியுள்ளது.

இதனையடுத்து பலஸ்தீனர்கள் மீதான தாக்குதலை நிறுத்திக் கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ள அமெரிக்கா - பலஸ்தீனர்களும் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ள வேண்டுமென கடந்த 16ஆம் திகதி அறிவுறுத்தியுள்ளது.

மறுபுறம் பலஸ்தீன இயக்கங்கள், இஸ்ரேலுக்கிடையே யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள எகிப்து மேற்கொண்ட முயற்சிகள் துளியும் பயனளிக்கவில்லை.

இஸ்ரேலியர்கள் மீதான தாக்குதலை நிறுத்தி சமாதான யுத்த நிறுத்தத்திற்கு தாம் வரவேண்டுமானால், ஹமாஸ் இயக்கத் தலைவர்கள் கொலை செய்யும் முயற்சிகளை இஸ்ரேஸ் மேற்கொள்ளாது என சர்வதேச சமூகம் உறுதியளிக்க வேண்டும் என ஹமாஸ் பிரதிநிதிகள் வலியுறுத்துவதில் அடம் பிடிக்கின்றனர்.

மறுபுறம், ஹமாஸுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக இஸ்ரேல் பிரதமர் கூறியதுடன், வன்முறைகளுக்கு மத்தியில் சமாதானம் மலர்வது முடியாத காரியம் என வாதிடுகின்றார்.

இதனால், சமாதானத் திட்டத்தைச் சீர்குலைத்துவிட்டதாகவும், 2001இல் பதவி ஏற்றது முதல் ஆக்கிரமிப்புக் குடியேற்றங்களை மேற்கொண்டு வருவதாகவும் பிரதமர் ஏரியல் ஷரோன், இடதுசாரி கட்சியினால்



இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன்

விமர்சிக்கப்படுகின்றார்.

எனவே, மத்திய கிழக்கில் **Road Map** என்பது தற்போது கேள்விக் குறியாகியுள்ளது. சமாதானத்திற்கு ஆதரவு அளித்த பிரதமர் ஏரியல் ஷரோனே தற்போது வன்முறையில் எப்படி சமாதானம் பிறக்கும் என வினா எழுப்பி இருப்பது சமாதானத்தில் அவருக்கு இருக்கும் ஈடுபாட்டைக்காட்டுவதாக அவதானிகள் முணுமுணுக்கின்றனர்.

மறுபுறத்தில் பலஸ்தீன தீவிரவாத அமைப்புக்களுடன் பலஸ்தீன பிரதமர் அப்பாஸ் நடத்திய பேச்சுக்களும் தோல்வியில் தான் முடிந்துள்ளன.

இஸ்ரேல் தாக்குதல்களை நிறுத்துவதுடன், சட்டவிரோதக் குடியேற்றங்களும் நிறுத்தப்பட்டால் மட்டுமே தமது தாக்குதல்கள் ஓயும் என ஹமாஸ் அமைப்பு முரண்டு பிடிக்கின்றது.

இதனால், பலஸ்தீன இஸ்ரேல் சமாதான உடன்படிக்கைக்கு ஊறு விளைவிக்கும் தடைகளை உடைத்தெறிவதென கூறிக் கொண்டு அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் பலஸ்தீனம் விரைந்துள்ள அதேநேரம்,

ஈராக் போருக்கு அறை கூவல் விடுத்த ஜோர்ஜ் புஷ் தற்போது சமாதான பிரியராகக் காட்டிக் கொள்வதும் அதிக நிதி திரட்டுவதும் எதிர்வரும் சனாதிபதி தேர்தலுக்காகவே என்று வாஷிங்டனில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

எனவே, தற்போதைய சூழலை ஜோர்ஜ் புஷ் எப்படி எதிர் கொள்ளப் போகின்றார் என்பதுடன் இவர் முன்னெடுத்துள்ள சமாதானத் திட்டம் கரைசேருமா என்பதே பலரது எதிர்பார்ப்பு ஆகும்.

மறுபுறத்தில் பலஸ்தீன - இஸ்ரேல் தாக்குதல்களால் அதிகம் பாதிக்கப்படுவது மக்கள்தான். அண்மைய தாக்குதலில்கூட மூன்று வயது குழந்தை பலியானதே... இதற்கு யார் பொறுப்பு? ஏதுமறியாதவர்கள் தான் இடையில் நசுக்கப்படுவதா.... என்றும் இன்னொரு சாராரிடையே கருத்து நிலவுகின்றது.

எனவே, ஜோர்ஜ் புஷ் முன்னெடுத்துத்தளிக்கும் சமாதானத் திட்டம் எதுவரை பயணிக்கும்....... சமாதானத்திலா.......அல்லது எதிர்வரும் அமெரிக்க சனாதிபதி தேர்தல் காலம் மட்டுமா..... அதன் பின்னர் அது கைவிடப்படுமா...... என்பனவெல்லாம் எதிர்காலத்தில் பதில் தேட வேண்டிய வினாக்கள் ஆகும்.

*அ. கலைவாணி*

---

## கழிவுப் பொலித்தீன்கள் கரைதுறைப்பற்றில் கொள்வனவு

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கழிவுப் பொலித்தீன்கள் கொள்வனவு தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சூழல்பாதிப்பைக் கட்டுப்படுத்தும் பொருட்டு கழிவுப் பொலித்தீன்கள் கிலோ 100 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்படவுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 22ஆம்திகதி பொலித்தீன் கொள்வனவிற்காக உள்ளூராட்சித் திணைக்களம் திறந்திருந்தமை தெரிந்ததே.

தற்போது மேற்படி தினத்தில் மாத்திரம் விசேட விலையில் கொள்வனவு செய்யப்படும் எனவும் ஏனைய நாட்களில் குறைந்த விலையிலேயே கொள்வனவு செய்யப்படுமெனவும் உள்ளூராட்சித் திணைக்கள விசேட ஆணையாளர் சுகிர்தா நேசரட்ணம் தெரிவித்தார். (பா)

---

## தட்டிக்கேட்க ஆளில்லாது யாழ்.இல் பரவலான மனிதவுரிமை மீறல்கள்!

### - தெ.ஆபிரிக்க ம.உ. தலைவரிடம் முறையீடு

(யாழ்ப்பாணம்)

தட்டிக்கேட்க ஆளில்லாது யாழ்ப்பாணத்தில் மனித உரிமை மீறல்கள் பரவலாக நடைபெறுவதாக யாழ் அரச சார்பற்ற அமைப்புக்களின் ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது. நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த தென்னாபிரிக்க மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் யோடி கொலப்பன் அவர்களை அலுவலகத்தில் சந்தித்து அரச, அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் இன்று உயர்பாதுகாப்பு வலயம் என்று தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்இடங்கள் சட்டபூர்வமற்றவையாகும். இதனால் மனிதனின் அடிப்படையுரிமை மறுக்கப்படுவதாகவும் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் இருக்கின்ற மாணவர்களின் கல்வியுரிமையும் மீறப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர். இதனால் இலட்சக்கணக்கானோர் இடம்பெயர்ந்து அகதிவாழ்வு வாழ்கின்றனர். காணாமல் போனோர் தொடர்பாகவும் எந்தத்தகவலும் கிடைக்கவில்லை. ஆனால் தொடர்ச்சியாக மனிதவுரிமை ஆணைக்குழு முறைப்பாடுகளைச் செய்கிறது. இதற்குக் காரணம் மனித உரிமை ஆணைக்குழுக்களுக்குப் பூரண அதிகாரம் வழங்கப்படாமையே என்று சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதற்கு தென் ஆபிரிக்க மனிதவுரிமை ஆணைக்குழுவின் தலைவர், கொழும்புக்கு அடுத்தபடியாக யாழ்ப்பாண மனிதவுரிமை ஆணைக்குழுவைப் பலப்படுத்துவதாகவும் மனிதவுரிமை மீறல்களை உடனுக்குடன் கட்டுப்படுத்தக் கூடிய மூன்று அதிகாரிகளையும் நியமிக்கப்போவதாகவும் கூறினார். (33)

# போதைக்கு அடிமையாகி வாழ்வை இழக்காதீர்!

இன்று உலகளாவிய ரீதியில் பாரிய அச்சுறுத்தலாக இளைஞர்கள் முதல் வயோதிபர் வரை பலரையும் அடிமையாக்கி சமூகத்தைச் சீர்குலையச் செய்வதில் "போதைப் பொருள்" முதன்மை பெறுகின்றது.

இதற்கு அடிமையாகிய ஒருவர் தனது வாழ்வில் முன்னேறுவதைக் காண முடியாது ஒருவன் என்று முதன் முதலாக போதைபொருளைப் பாவிக்கின்றானோ அன்று அவனுக்கு அது இன்பம் போலத்தான் இருக்கும். ஆனால், அன்றே தனது வாழ்வை இழந்து விடுவதை யாராயினும் எண்ணுவதில்லை.

ஏனெனில், காலம் செல்லச் செல்ல போதைப் பொருளை அதிகளவாக அருந்துவதற்கு முற்படுகின்றான். இதனால் பணம் அதிகளவு தேவைப்படும். தன்னிடம் பணம் இல்லாத வேளை போதைக்கு அடிமையாகியவன் கொலை, கொள்ளை, ஆட்கடத்தல்.... போன்ற பல்வேறு குற்றச் செயல்களைச் செய்து தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளவும் தயங்குவதில்லை.

இன்றைய நவீன உலகில் பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி அவர்கள் அனுப்பும் பணத்தில் சில ஆண்கள் வேலைக்குச் செல்லாமல் போதையே வாழ்க்கை என இருக்கின்றனர். அவள் எப்படி கஷ்டப்பட்டு வேலை செய்து பணம் அனுப்புகிறாள் என ஒரு துளியும் சிந்திக்காமல் அப்பணத்தை போதைக்காகவே அழிக்கின்றார்கள். இவர்களது குடும்பத்திற்கு இறுதியாக எஞ்சுவது நோய் தவிர வேறொன்றும் இல்லை.

இதன் ஆரம்ப நிகழ்வு புகைபிடிக்கும் பழக்கமாகும். எவர் ஒருவர் புகைத்தலை ஆரம்பிக்கின்றாரோ அவரின் அடுத்த கட்ட நகர்வு போதைப்பொருள் பாவனைக்கு உள்ளாகுதலாகும்.

பல்வேறு வகையான போதைப் பொருட்கள் காணப்படுகின்றன. கசிப்பு, சாராயம், ஹெரோயின், கஞ்சா, அபின்...... போன்ற பலவகைப் பொருட்கள் காணப்படுகின்ற போதிலும் எமது பகுதிகளில் "கசிப்பு" எனும் பானம் மிகவும் மோசமானதாகும். இதனைப் பாவிப்பவர்களுக்கு பல விதமான நோய்கள் ஏற்படுகின்றன. இதன் தாக்கம் மிகவும் மோசமானது.

அதாவது, அதிகமான போதைப் பிரியர்களும் எப்படியாயினும போதையைப் பாவிக்க வேண்டும் எனும் நோக்கிலிருப்பவர்களும் பணவசதி குறைந்த கசிப்பையே கூடுதலாகப் பாவிக்கின்றனர்.

ஹெரோயின் போன்ற போதைப் பொருட்கள் பெரும்பாலும்


**த. ரேணுகா**

வெளிநாடுகளிலிருந்தே கொண்டு வரப்படுகின்றது. இவற்றை அடிக்கடி பாவிப்பவர்கள் இது இல்லாதிருக்கமாட்டார்கள். அவ்வளவிற்கு போதை ஒருவனை அடிமையாக்கி தன் பக்கம் கவர்கின்றது.

மேலும், ஊசி மூலமான போதை மருந்து ஏற்றுதல் பெரும் விளைவுகள் ஏற்பட வாய்ப்பாக அமைவதோடு, சமூகத்தில் இதன் பால் நிகழ்ந்துள்ள சம்பவங்களைப் பார்த்தும் கேட்டும் அறிகின்றோம். அதாவது, இந்த போதை ஊசி மருந்து பாவனையால் கொடிய ஆட்கொல்லி நோயான எயிட்ஸ்கூட வருகின்றது என மருத்துவ ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

சில பெற்றோர் தமது பிள்ளைகள் தீய வழியில் நுழைய தாமே காரணமாக அமைகின்றார்கள். அதாவது, தமது பிள்ளையிடம் பணத்தைக் கொடுத்து போதைப் பொருட்களை வாங்கி வருமாறு கூறுகின்றனர். அப்பிள்ளை சிறிது சிறிதாக அதைப் பாவித்து பிள்ளை இப்பழக்கத்திற்கு உட்படுகின்றது. "தொட்டில் பழக்கம் சுடுகாடுவரை" எனும் பழமொழிக்கமைய அப்பிள்ளையின் பழக்கம் அமைகின்றது. தலைமுறை தலைமுறையாக அழியாது போதைப் பொருள் பேணப்பட்டு வருகின்றது.

இன்றைய நவீன உலகில் மாணவரிடையே ஹெரோயின் பாவனை அதிகரித்து வருவதாகத் தெரிய வருகின்றது. போதைப் பொருட்களை கடத்தி விற்பனை செய்பவர்கள் மீது பல விதமான தண்டனைகள் வழங்கப்படுகின்றபோதிலும் போதைப் பொருட்களை உலக நாடுகளுக்கு கடத்துதலில் கேந்திர நிலையமாக இலங்கை விளங்குகின்றதென போதைப் பொருள் தடுப்புப் பணியகத்தின் பணியாளரும் சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தருமான ஜெய சுந்தர கூறியுள்ளார்.



ஈரான், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், மியன்மார், லாவோஸ், தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து பெருமளவு போதைப் பொருட்கள் இங்கு கொண்டுவரப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எஞ்சியவை சட்டவிரோதக் கடத்தற்காரர்கள் மூலம் அவுஸ்திரேலியா ஜேர்மனி, நைஜீயா ஆகிய நாடுகளுக்குக் கொண்டு செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் போதைப் பொருள் பாவனைக்காக நாளாந்தம் 05 கோடி ரூபா செலவிடப்படுவதாக பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பணியகம் கூறியுள்ளது.

இப்பழக்கத்திற்கு அடிமையானவர்களில் தனிநபர் செலவில் நாள் ஒன்றுக்கு 500 ரூபா செலவாவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை முழுவதிலும் சுமார் ஒரு லட்சம் பேர் போதைக்கு அடிமையாகியுள்ளனர்.

நாளாந்தம் போதைப் பொருள் பாவித்து அதன் காரணமாக குற்றம் செய்தோருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படுகின்றன. 47 சதவீதமானோர் இதனால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக ஜெயசுந்தர தெரிவித்துள்ளார். இன்று வரை 38 இலங்கைப் பிரஜைகள் உட்பட 47 பேருக்கு போதைப் பொருள் குற்றச்சாட்டின் பெயரில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஆயுட்காலச் சிறைத்தண்டனை பெற்றவர்களின் தொகையும் அதிகமாகும்.

வாகனம் செலுத்தும் போது மது பானம் அருந்தி சுயநினைவில்லாமல் வாகனத்தைச் செலுத்துவதனால் பலவிதமான விபத்துக்களை எதிர் நோக்க வேண்டியிருக்கின்றது. ஏ-9 பாதை திறக்கப்பட்டவுடன் இவ்வாறு வாகனம் செலுத்திய பலரை காவல்துறையினர் கண்டுபிடித்து தண்டனை விதித்துள்ளனர்.

விளையாட்டு வீரர்கள் சில வேளைகளில் போதைப் பொருள் அருந்துவதனால் விளையாட்டிலிருந்து அவர்கள் நீக்கப்பட வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. எத்துறையை எடுத்தாலும் எல்லாவற்றையும் போதை தன் வசப்படுத்தியுள்ளது.

ஒருவர் தனது சுய சுகாதாரத்திற்காக சமுதாயத்தில் தீங்கு விளைவிக்கக் கூடிய வகையில் போதைப் பொருள் பாவிப்பதனால் இவரது "ஒளிமயமான வாழ்வு இருளடைகிறது" இதனால் சமூகம் பல்வேறு வகையான குற்றச் செயல்களுக்கு உட்படுகிறது. மதுபானம் பாவிப்பவரின் அறிவு நாள் செல்லச் செல்ல மந்த நிலையை அடைகிறது. போதையைப் பயன்படுத்தியவர் சுய அறிவு இல்லாமல் தனது வாயில் வருகின்ற வார்த்தைகளைக்கொட்டுகின்றான். "குடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு" என்பதற்கமைய போதைப் பொருட்களைப் பாவிப்பவர்கள் இவ்வாறு தீய வார்த்தைகளைப் பேசி சமூகத்துடன் முரண்படுவதால் சமுதாயம் அவர்களது குடும்பத்தையே தள்ளிவைத்துவிடுகிறது. இதனால் சுயவாழ்வு கெட்டு குடும்பம் சீரழிகிறது.

மதுபானம் பாவிப்பவர்களின் மூளை நரம்புகள் பாதிப்படைவதுடன் ஈரல் சுவாசப்பை, குருதித் தொகுதி பாதிப்படைகிறது. இவர்களது மனைவி, பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு கேள்விக் குறியாகவே அமைகிறது. இவர்களது மதுபோதையானது எதிர்காலத்தையே சிதைக்கிறது. இதனால் சுயகௌரவம் என்பன தாழ்த்தப்படுகிறது.

> இன்று உலக போதைப் பொருள் ஒழிப்பு தினத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

இன்று பல பெண்கள் போதைப் பொருளிற்கு அடிமையாகி வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு போதைப் பொருள் பாவனையில் ஈடுபடுவோரைக் குறைத்து சமூகத்தில் சிறந்த மனிதர்களாக வாழவைப்பதற்கு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. இதனை உத்வேகப்படுத்த உலகளாவிய ரீதியில் போதைப் பொருள் "எதிர்ப்பு தினம்" அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டும் இதன் பாவனை குறைவதாகவில்லை.

போதைப் பொருளிற்கு அடிமையானவர்கள் மருத்துவர்களின் ஆலோசனையைப் பெறுவதன் மூலம் அதிலிருந்து மீட்சி பெறமுடியும். இதற்கு அவர்கள் முழுமனதுடன் செயற்படவேண்டும். இதனைவிட போதைப் பொருளுக்கு அடிமையாவதை தவிர்த்துக் கொள்வதே மிகவும் சிறப்பானதாகும். □

## விரிவுரைகள் ஆரம்பமாகும்!

பலாலி ஆசிரியர் கலாசாலைக்கான புதிய ஆசிரிய மாணவர்களின் பெயர்ப் பட்டியல் கல்வியமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கான கடிதங்கள் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கான விரிவுரைகள் ஜூலை மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக கலாசாலை அதிபர் சதாசிவமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## மிதிவண்டி ரயர் வெடித்து இராணுவத்தினர் கலக்கம்!

(யாழ்ப்பாணம்)

கைதடியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி துவிச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்த வயோதிபரின் துவிச்சக்கர வண்டி ரயர் வெடித்தது. இச்சத்தத்தைக் கேட்ட காப்பரண்களுக்குள் இருந்த இராணுவத்தினர் மிகவும் வேகமாக வெளியே ஓடிவந்தார்கள். இதனைக் கண்ட மக்கள் இராணுவத்தினரைப் பார்த்துச் சிரிக்க இராணுவத்தினர் மிகுந்த அவமானத்துடன் மீண்டும் காவலரணுக்குள் திரும்பிச் சென்றனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கைதடிப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. (33)

## புதிய மோட்டார் சைக்கிள்களுக்கு பதிவுகள் மேற்கொள்ளல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இயங்கும் மோட்டார் போக்குவரத்துப் பிரிவு காரியாலயத்தில் புதிய மோட்டார் சைக்கிள்களுக்கான சிறிலங்காப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் சாரதி அனுமதிப்பத்திரம் பூர்த்தியான விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருவதுடன் சாரதிகளுக்கான பயிற்சி வகுப்புக்களும் நடாத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கிளி. மாவட்ட மோட்டார் வாகன போக்கு வரத்துப் பிரிவு ஆணையாளர் ஆகுந்த சாமி தெரிவித்துள்ளார்.

மற்றும் பழைய சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளவர்களுக்குப் புதிய கணினி சாரதி அனுமதிப்பத்திரமும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். (சோ)

## அளம்பில் திலீபன் மருத்துவமனையில் முதலாம் ஆண்டு நிறைவு விழா!

(முல்லைத்தீவு)

கடற்புலிகளின் பிரதேசங்களில் ஒன்றான அளம்பில் பிரதேசத்தில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் மருத்துவமனையில் முதலாம் ஆண்டு நினைவு விழா நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணிக்கு திலீபன் ஞாபகார்த்த மருத்துவமனை அபிவிருத்திச் சங்கத் தலைவர் மி. யோன்சன் மோகனராஜா தலைமையில் ஆரம்பமானது.

மங்கள விளக்கினை அளம்பில் பங்குத் தந்தை வணபிதா யூட் அமலதாஸ், அளம்பில் முருகன் ஆலய குருக்கள் ஆகியோர் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியினை கடற்புலிகளின் தளபதி செ. மங்களேஸ் ஏற்றிவைத்தார். தியாகி திலீபனின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை அளம்பில் கிராம அலுவலர் தி. ஜெயபாபு ஏற்றி வைக்க திருவுருவப் படத்திற்கான மலர் மாலையினை திருமதி. மங்கயற்கரசி அணிவித்தார்.

சிறப்புரைகளை தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி, அளம்பில் பங்குத் தந்தை வணபிதா யூட் அமலதாஸ், குமுழமுனை கிராம அலுவலர், அளம்பில் தியாக தீபம் திலீபன் மருத்துவமனை வைத்தியர் செவ்வானம், தியாக தீபம் மருத்துவ சேவைப் பொறுப்பாளர் ஈழச்செல் வன் ஆகியோர் ஆற்றினர். தொடர்ந்து மருத்துவமனையில் கடமையாற்றும் தொண்டர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டது. தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (20)

## மீள்குடியமர்ந்தோருக்கான கொடுப்பனவு வழங்கவிடாது கிராம சேவையாளர் தடுப்பு

(கண்டாவளை)

முரசுமோட்டை ஊரியான் கிராமத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கான 25ஆயிரம் ரூபா மீள்குடியமர்வுக் கொடுப்பனவை 25 குடும்பங்களுக்கு கிடைக்கவிடாமல் அப்பகுதி கிராம சேவகர் தடுத்துள்ளதாக பிரதேச செயலருக்கு முறையிடப்பட்டுள்ளது. கிளி. கச்சேரியில் இயங்கும் நிக்கொட் நிறுவனப் பிரதிநிதிக்கும் ப.நோ. கூ. சங்கக் கிராமிய வங்கிக்கும் நீக்கப்பட்ட பெயர்களாக இவர்களின் பெயர்களைக் குறித்து இவர் அனுப்பியுள்ளார்.

இதனால், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கண்டாவளைப் பிரதேச செயலர் பி. கா. மத்தியாஸ் அவர்களிடம் சென்று முறையிட்டுள்ளார்கள். அத்தோடு, இக்கொடுப்பனவை பெற்றுத் தருமாறு உருக்கமான வேண்டுகோளையும் விடுத்துள்ளார்கள். மீள்குடியமர்வுப் பணம் வழங்கல் தொடர்பான கிராம ரீதியாக அமைக்கப்பட்ட குழு சிபார்சு செய்து கிராம சேவகர் ஊடாக பிரதேச செயலரின் ஒப்புதலுடன் அனுப்பி வைத்த கொடுப்பனவையே இக்கிராம சேவகர் தடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக விசாரணை நடத்தப்படவுள்ளதாக பிரதேச செயலர் கூறியுள்ளார். (14)

## க.வ.ப.நோ.கூ.சங்கம், பரந்தன்

# பதவி வெற்றிடம்

01. *அங்கத்தவர் தொடர்பு உத்தியோகத்தர்*

02. *வங்கிச் சேவை முகாமையாளர்.*

03. *எழுதுநர்.*

### 1. அங்கத்தவர் தொடர்பு உத்தியோகத்தர் அலகு 201/10

**சம்பள அளவுத்திட்டம்- 4750/-100X10 - 110X10 - 6850/=**

**தகைமை:-** அ) கூட்டுறவுப் பணியாளர் 11வது சம்பளத் திட்டத்தில் அங்கத்தவர் தொடர்பு பயிற்சி உத்தியோகத்தர் பதவியில் 03 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் 12 வது சம்பளத்திட்டத்தில் அதே பதவியில் 06 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டதாரியாகவும், ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் கூட்டுறவுச் சமூக அபிவிருத்தி சம்பந்தமான துறையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

### 2. வங்கிச் சேவை முகாமையாளர் அலகு 111/10

**சம்பள அளவுத்திட்டம்- 4750/-100X10 - 110X10 - 6850/=**

**தகைமை:-** அ) கூட்டுறவுப்பணியாளர் 11வது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் முகாமை/மேற்பார்வை தரப் பதவியில் 03 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12 வது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் முகாமை அல்லது மேற்பார்வை மட்டப் பதவியில் 06 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டதாரி அல்லது அதற்குச் சமமான தராதரங்களுடன் வர்த்தக வங்கியியல் துறையில் 01 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப்பணியாளர் உயர்தரம் (சான்றிதழ்) அல்லது க.பொ.த.(உ/த) 03 பாடங்களில் சித்தியும் வங்கியியல் துறையில் மேற்பார்வை மட்டப் பதவியில் 04வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

### 3. எழுதுநர் அலகு 302/11

**சம்பள அளவுத்திட்டம்-4500/- - 90X10 - 100X10 - 6400/=**

**தகைமை:-** அ) கூட்டுறவுப்பணியாளர் 12வது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர்/எழுதுநர் பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் 13வது சம்பளத் திட்டத்தில் அதே பதவியில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல்.

அல்லது

ஆ) ஐக்கிய இராச்சிய நிறுவனத்தின் கணக்குப் பதிவாளர் இடைநிலைப் பரீட்சையில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனத்தில் 04 வருடத்திற்குக்குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது

இ) கூட்டுறவுப்பணியாளர் உயர்தர தராதரப் பத் திரம் அல்லது க.பொ.த.(உ/த) 03 பாடங்களில் சித்தியும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனத்தில் கணக்கியல் சம்பந்தமான வேலைகளில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

**வயது எல்லை :-**

18வயது தொடக்கம் 45 வயது வரை
(கூட்டுறவுப்பணியாளர்களுக்கு வயது எல்லை கவனிக்கப்படமாட்டாது)

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் வேறு நிறுவனங்களில் கடமையாற்றினால் நிறுவனங்களுக்கு ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் பூர்த்திசெய்யப்பட்டு 10.07.2003 ஆம் திகதிக்கு முன் தலைவர், கரைச்சி வடக்கு ப.நோ.கூ. சங்கம், பரந்தன். என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது பரந்தனில் உள்ள தலைமைக் காரியாலயத்தில் நேரில் சமர்ப்பிக்கலாம்.

தலைவர்,
கரைச்சி வடக்கு ப.நோ.கூ. சங்கம்,
பரந்தன்.

(சி-8184)


# உரித்துடையோர் தொடர்புகொள்ள இல.செஞ்சிலுவை கோரியுள்ளது

(அலுவலக செய்தியாளர்)

பாலகிருஸ்ணன் என்ற வயோதிபர் கடந்த 20ஆந் திகதியன்று வவுனியா வைத்தியசாலையில் மரணமடைந்து தற்போது அவரது சடலம் வவுனியா ஆதார வைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது.

உரித்துடையவர் எனக்கருதப்படும் அக்கராயனை வசிப்பிடமாகக் கொண்ட இராமையா என்பவர் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத் தீவு, கிளிநொச்சி கிளைகளில் ஏதேனுமொன்றுடன் உடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தேடுதல் பிரிவினர் வேண்டுகை விடுத்துள்ளனர். (சோ)


## 4ஆம் ஆண்டு நினைவலைகளில்....

பிறப்பு 20 - 04 - 1972



வீரச்சாவு 26 - 06 - 1999

### மேஜர் யாழிசை

**பரராசசிங்கம் மங்கயற்கரசி**

கரவெட்டி கிழக்கு, யாழ்.

விடுதலை வானில் வெற்றிச் சிறகடித்த வேங்கையே
தேச விடுதலைக்காக இறுதிவரை போராடியவளே!
கரிகாலன் அணி சேர்ந்து களமாடி
துயில் வாழ்வெய்திய வீரப்புலியே
தென்றல் வீசும் வாசமலர் சோலையில் நீ
மறுபடியும் எழுந்து வருவாய்
எங்கள் மாணிக்கமே! மாவீரர் மரணிப்பதில்லை.
தெரிந்தும் உன் பிரிவிற்காய் அழுகிறோம்.
தளராத உன் பாதச் சுவடுகளில் மலர் தூவி அஞ்சலிக்கிறோம்.
வானமும், கடலும், வண்ணமணித் தமிழீழமும் உன்
வரவிற்காய் காத்திருக்கின்றன! வந்துவிடு மீள...

**இந்நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகிறோம்.**

உன்பிரிவால் வாடும்
**குடும்பத்தினர்.**

(3346)

## தமிழீழத்தின் வெற்றிப் பொட்டு





**லெப். கேணல் தணிகைச்செல்வி** **மேஜர் டிலானி**

ரண கோஷம் - 04

கொட்டடா முரசம் கொட்டு
சிங்களக் கொடுமுடி சரிந்த தென்றே!
தட்டடா தோள்கள் தட்டு
தலைவனின் தாள்கள் தொட்டு
எட்டடா கால்கள் எட்டு
எல்லையைத் தாண்டி எட்டு!
முட்டடா பகையை முட்டு
உடல்தனில் வெடிகுண்டேந்தி!
பொட்டடா வை வை பொட்டு
தமிழீழத்தின் வெற்றிப் பொட்டு.

*இந்நாளில் சகல மாவீரர்களையும் நினைவில் கொள்ளும்-*

போராளி தேவா அண்ணியும்,
சகபோராளிகளும்.

(3336)

## சிந்தனைக்கு



இன ஒடுக்கு முறையாலும், இராணுவ அடக்கு முறையாலும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 26-06-2003

# ஒரு படி!

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான விடயத்தில் ஒருபடி முன்னேற்றம் ஏற்படலாம் என்ற நம்பிக்கை துளிர்விடத் தொடங்கியுள்ளது. மீண்டும் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்படலாம் என விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்துள்ள நம்பிக்கையும், நாடு திரும்பியதும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து புதிய திட்டவரைபு விடுதலைப்புலிகளிடம் சமர்ப்பிக்கப்படும் என்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அறிவிப்பும் இத்தகைய நம்பிக்கைக்குக் காரணமாகும்.

லண்டனில் கடந்த சில நாட்களில் இடம்பெற்ற இராஜதந்திரச் செயற்பாடுகளின் பின்னர் இந் நம்பிக்கையூட்டும் அறிவிப்புக்கள் வெளிவந்துள்ளன. லண்டனுக்கு விஜயம் செய்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க – லண்டனில் தங்கியுள்ள அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் – லண்டன் சென்றுள்ள நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் ஆகியோர் இடையிலான சந்திப்புக்கள், பேச்சுக்கள் என்பனவற்றை அடுத்து தற்போதைய சூழ்நிலை உருவாகியுள்ளது.

அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கலாம் என நம்பிக்கை வெளியிட்டமையும், பேச்சுவார்த்தைகளுக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிப்புக் குறித்து எரிக் சூல்ஹெய்முடன் பேசியிருப்பதாக வெளியாகியுள்ள தகவல்களும், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து அரசு ஓரளவேனும் முன்னேற்றகரமான திட்டம் ஒன்றை முன்வைக்கலாம் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டுள்ளதன் வெளிப்பாடே ஆகும். ஆயினும், அரசாங்கம் முன்வைக்கப்போகும் புதிய திட்ட வரைபைப் பொறுத்தே இறுதியான அபிப்பிராயத்தைத் தெரிவிக்க முடியும்.

மேலும், புதிய திட்டவரைபை அரசாங்கம் முன்வைத்து அவை பேச்சுவார்த்தைக்கு ஏற்றவையாக இருக்கும் பட்சத்தில் விடுதலைப் புலிகள் அவற்றில் திருத்தங்கள் மற்றும் சிபார்சுகள் என்பன செய்வதற்கும் வாய்ப்புக்கள் உண்டு. ஆகையினால், தற்பொழுது லண்டனில் இருந்து வெளியாகும் தகவல்கள் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்த விடயத்தில் முன்னேற்றம் காண்பதற்கான முதற்படி தென்படத் தொடங்கியுள்ளது என்றே கொள்ளத்தக்கதாகும்.

ஆனால், இடைக்கால நிர்வாகக்கட்டமைப்புக் குறித்த வரைபு எதையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ அன்றி அவரது அரசாங்கமோ வெளியிடாத நிலையிலேயே இதற்கு எதிரான பிரச்சாரத்தை சனாதிபதி சந்திரிகா உட்பட்ட அவரது பொ. ஐ. முன்னணி ஆரம்பித்துவிட்டது. உத்தியோகப்பற்றற்ற முறையிலான தமிழீழத்தை விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கத் தயாராகி வருவதாக ஆளும் கட்சி மீது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம் சாட்டியுள்ளார். இத்தனைக்கும் லண்டன் புறப்படுவதற்கு ஒரு நாள் முன்னதாக சனாதிபதியைச் சந்தித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்னமும் இடைக்கால நிர்வாகம் குறித்த இறுதி வரைபு தயாரிக்கவில்லை எனக் குறிப்பிட்டமை சுட்டிக்காட்டத்தக்கது.

ஆனால், சந்திரிகா குமாரதுங்கவினதும், பொ. ஐ.முன்னணியினதும் இவ் எதிர்ப்பானது 'மரபு' ரீதியானது. அதாவது, இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் எதை முன்வைத்தாலும் எதிர்க்கட்சிகள் எதிர்ப்பதென்பது சிறிலங்காவில் அரசியல் மரபாகிவிட்டது. எடுத்துக்காட்டாக, ஐம்பதுகளின் பிற்பகுதியில், பிராந்திய சபைகளை எதிர்த்தவர்கள், அறுபதுகளிலும், எழுபதுகளிலும் பிராந்திய சபைகளைவிட வலுக்குறைந்த மாவட்ட சபைகள், மாவட்ட அபிவிருத்திச் சபைகளைக்கூட எதிர்த்தனர். அதாவது, அதிகாரப் பரவலாக்களில், சமஷ்டி என எதிர்த்தவர்கள் பின்னர் மாநகர சபைகளுக்குரிய அதிகாரங்களை வழங்குவதைக்கூட எதிர்த்தார்கள்.

இந்தவகையில், சனாதிபதி சந்திரிகாவிடம் இருந்தும், பௌத்த–சிங்களப் பேரினவாதச் சக்திகளிடம் இருந்தும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கு எதிரான கூக்குரல்கள் எழுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். அத்தோடு, சனாதிபதி சந்திரிகா தனது நிறைவேற்று அதிகாரத்தை இவற்றிற்கு எதிராகப்பயன்படுத்தவும் கூடும். இதன் உச்சமாக சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையாகவுள்ள யுத்த நிறுத்தத்தையே அவர் குழப்பத்திற்கு உள்ளாக்க வாய்ப்புண்டு.

இக்குற்றச்சாட்டு ஆதாரமற்றதோ அன்றி கற்பனையின் அடிப்படையிலோ முன்வைக்கப்படுபவை அல்ல. சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகளை அவதானித்ததன் அடிப்படையில் வெளிப்படுத்தும் ஒன்றாகும். இதற்கு ஆதாரமாகக் கடந்த 14ஆம் திகதி விடுதலைப்புலிகளின் கப்பலை சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து மூழ்கடிக்க சனாதிபதி சந்திரிகா விடுத்த பணிப்புரையைச் சுட்டிக்காட்ட முடியும்.

ஆகையினால், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து சனாதிபதியிடம் இருந்து எழும் எதிர்ப்பை முறியடித்து முன்னேறும் உறுதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்குத் தேவை. சனாதிபதி சந்திரிகாவைத் திருப்திப்படுத்தவோ அன்றி இணங்க வைக்கவோ பிரதமர் ரணில் பணிந்துபோவதாலோ அன்றி அனுசரித்த செயற்பாடுகளை மேற்கொள்வதாலோ நன்மை கிட்டிவிடப் போவதில்லை. ஏனெனில், சந்திரிகா குமாரதுங்க எத்தகைய ஒத்துழைப்பையும் வழங்கிவிடப் போவதில்லை.

ஆகையினால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இடைக்கால நிர்வாக சபை அமைத்தல் போன்ற விடயங்களை ஒரு சவால் என்ற ரீதியிலேயே மேற்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு இல்லாதுபோனால், சனாதிபதி சந்திரிகா போன்றவர்களை எதிர்கொள்ளுதல் என்பது சாத்தியமற்றதொன்றாகும். ஆனால், அரசியல் ரீதியில் பிரதமர் ரணில் போதிய பலம் அற்றவராக உள்ளமையால், அதனை ஈடுசெய்ய, சர்வதேச நாடுகள் சமாதான முயற்சிகள் முன்னேறுவதற்காகத் தமது ஒத்துழைப்பை வழங்க முன்வரவேண்டும். அவ்வாறு இல்லாதுவிடில் பிரதமர் ரணிலின் ஆட்சியை மட்டுமல்ல, சமாதான முயற்சிகளையும் சனாதிபதி சந்திரிகா தோற்கடித்து விடுவார்.

# மக்கள் பலம் இல்லாத வேளைகளில் சுதந்திரக்கட்சி கூட்டணிக்கு முயல்கின்றது!

## - அமைச்சர் லக்கி ஜயவர்த்தன

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் மக்களின் செல்வாக்கு அற்றுப் போகும் சந்தர்ப்பங்கள் எல்லாவற்றிலும் ஏதோ ஒரு வகையில் கூட்டணி அமைக்கவே முற்படுகின்றமை வரலாற்று நிகழ்வாக உள்ளது. அதன் இறுதி விளைவு கட்சி முன்வரைவிட சிதைந்து போவதாக தோன்றுவதாக சிறிலங்காவின் காணி அமைச்சர் லக்கி ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

உடுநுவர என்ற இடத்தில் தொகுதி அபிவிருத்தி சபையின் ஐ.தே.க. செயற்குழு முன்னிலையில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் பேசுகையில் "அண்மையில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சி சம்மேளனத்தின் போது தமது கட்சி உறுப்பினர் பலர் பிரிந்து சென்று ஜே.வி.பீ யினருடன் இணைவதாக கட்சி அமைப்பாளர்கள் தம்மிடம் புகார் செய்வதாக சனாதிபதி தெரிவித்துள்ளார். கூட்டணி அமைப்பினூம் ஜே.வி.பியின ருக்கே இதில் அதிகலாபம் உள்ளது தெளிவாகிறது. 1994ஆம் ஆண்டு நாம் ஆட்சியை கையளிக்கும் போது ஐந்து சதவீதமாக இருந்த பொருளாதார வளர்ச்சி 2001ஆம் ஆண்டு நாம் ஆட்சியை கைப்பற்றியபோது வளர்ச்சி அடி மட்டத்தில் இருந்தது.

இந்த வளர்ச்சி இப்போது 4வீதமாக உயர்ந்துள்ளது. மேலும் காலப்போக்கில் இது எட்டு வீதமாக அதிகரிக்கப்படும் எனவும் கூறியுள்ளார்.

# உடத்தலவின்ன படுகொலை சாட்சியை அச்சுறுத்தியமையை விசாரிக்கப் பணிப்பு!

(கொழும்பு)

உடத்தலவின்ன படுகொலை வழக்கில் அனுரா பண்டார என்ற சாட்சி அச்சுறுத்தப்பட்டமை தொடர்பாக விசாரணை நடாத்தி உடனடியாக அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு மூன்று நீதிபதிகள் கொண்ட கொழும்பு நீதிமன்றம் இரகசிய பொலிசாருக்கு நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக சாட்சியிடம் அறிக்கை ஒன்றைப் பெற்று அதுபற்றி விசாரணை நடத்துமாறு நீதிமன்றம் இரகசிய பொலிஸ் பிரிவின் பணிப்பாளருக்கு உத்தரவிட்டது.

இதன்பின்னர் பிரதிவாதியின் சட்டத்தரணி கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்த அனுரா பண்டார என்ற சாட்சி, சம்பவம் நடைபெற்ற தினத்தன்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட டிபெண்டர் வாகனத்திற்குப் பின்னால் 12 ஆவது சந்தேக நபர் ட்ரக் வாகனம் ஒன்றை ஓட்டிச் சென்றதைத் தான் கண்டதாகக் கூறினார்.

அவர் மீதுள்ள கோபம் காரணமாகவோ அரசியல் காரணத்தினாலோ தாம் இவ்விதம் கூறவில்லை என்றும் சாட்சி கூறினார்.

இதன் பின்னர் சாட்சியம் அளித்த சஜீம் என்பவர் வாக்குப் பெட்டிகளை எடுத்துச் சென்று பள்ளேகெடுவ பின்னால் தாமும் வேறு சிலரும் வான் ஒன்றில் பயணம் செய்ததாகக் கூறினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இரண்டு டிபெண்டர் வாகனத்தில் வந்தவர்கள் ரத்வத்தவின் கோஷ்டியினர் எனத் தெரியவந்ததாகக் கூறினார்.

இதன்பின்னர் தாங்கள் பயணம் செய்த வான் தூண் ஒன்றுடன் மோதியதாகவும் டிபெண்டர் வாகனங்களில் வந்தவர்கள் சுட்டுவிட்டுத் தப்பி ஓடியதாகவும் சாட்சி கூறினார்.

லொகான் ரத்வத்தவின் குழுவினரே இத் துப்பாக்கிச் சூட்டினைச் செய்ததாக அப்பகுதிக்கு வந்த பொலிசாரிடம் தான் தெரிவித்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

# இடைக்கால சபைக்கு இடமளியாவிடின் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகலாம்!

## - சிஹல உறுமய எச்சரிக்கை

புலிகள் எதிர்பார்க்கும் அளவிலான இடைக்கால நிர்வாகம் ஒன்றை வழங்க ரணில் விக்கிரமசிங்க விரும்பவில்லையேல் புலிகள் நாட்டின் முக்கிய ராணுவ நிலைகள், கேந்திர நிலைகள் மீது பாரிய தாக்குதல் நடத்துவர் என தமக்கு தகவல்கள் கிடைத்திருப்பதாக 'சிஹல உறுமய' பிரச்சார செயலர் உதய பிரபாத் கமன்பில கூறியுள்ளார்.

மேலும் அவர் விடுத்துள்ள அறிக்கையில் விடுதலைப்புலிகள் தாம் மனதளவில் வெற்றியடைந்துள்ளதாகவும் அரசு தோல்வியடைந்துள்ளதாகவும் கருதி மீண்டும் பேச்சுவார்த்தைக்கு செல்லத் தீர்மானித்துள்ளது என தெரிவித்துள்ளார்.

# இன்று அவசர சந்திப்பை மேற்கொள்ள அநுராவிற்கு சனாதிபதி அழைப்பு!

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று அநுரா பண்டாரநாயக்கவை அவசர சந்திப்பொன்றுக்கு அழைத்துள்ளார். இதனை உடகங்களுக்கு அநுரா தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரம் பற்றியும் அரசியல்வாதிகளினதும் பொலிசாரினதும் கொலை தொடர்பாக ஆராயவும் மேற்படி சந்திப்பு நடைபெறவுள்ளது. இதன்போது உள்நாட்டலுவல்கள் அமைச்சை சனாதிபதி பொறுப்பேற்பது பற்றி சுட்டிக் காட்டப்படவுள்ளதாகவும் தெரிவிக்கும் அநுரா பண்டாரநாயக்க அண்மைக் காலமாக நாட்டில் நடைபெறும் கொலைகள் பற்றி அரசு கவனத்திற் கொள்ளாதிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# சமநிலையில் முடிந்த டெஸ்ட்போட்டியில் இரட்டைச் சதமடித்து லாறா சாதனை



மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் வீரர் பிறைன் லாறா டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது ஐந்தாவது இரட்டைச் சதத்தையடித்துச் சாதனை படைத்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவு, மற்றும் சிறிலங்கா அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி மேற்கிந்தியத் தீவுகளின் செல்லூசியாவில் நடைபெற்றது.

இப்போட்டியின் இரண்டு நாள் ஆட்டம் மழை காரணமாக நடைபெறவில்லை.

முதல் இன்னிங்சில் சிறிலங்கா அணி354 ஓட்டங்கள் எடுத்தது. அடுத்து ஆடிய மேற்கிந்திய அணி தனது முதல் இன்னிங்சில் 9 விக்கட் இழப்பிற்கு 477ஓட்டங்கள் குவித்தபோது போட்டி சமநிலையில் முடிந்ததாக அறிவிக்கப்பட்டது.

மேற்கிந்தியத்தீவு அணித் தலைவர் பிறைன்லாறா அபாரமாக விளையாடி 209 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இது டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் லாறா அடித்துள்ள ஐந்தாவது இரட்டைச் சதமாகும்.




# முன்னணி டென்னிஸ் வீரர்கள் இரண்டாம் சுற்றுக்குத் தகுதி

லண்டனில் நடைபெற்றுவரும் விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் அந்திரே அகாஷி, செரினாவில்லியம்ஸ் உள்ளிட்ட முன்னணி வீரர், வீராங்கனைகள் முதல்சுற்றில் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் ஆடவர் பிரிவில் உலகின் இரண்டாம் நிலை வீரரான அமெரிக்காவின் அந்திரே அகாஷியும் பிரிட்டனைச் சேர்ந்த ஜெமின் டெலகாராவும் மோதினர்.

இதில் 6:4,6:0,5:7,6:4 எனும் செட் கணக்கில் அகாஷி வெற்றி பெற்று இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளார்.

இதே போல கார்லஸ் பெரேரோவும், லிங்அன்மானும் இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றனர்.

மகளிர் பிரிவின் ஆட்டத்தில் அமெரிக்காவின் செரினாவில்லியம்சும், பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனினும், ரஷ்யாவின் மரியாசரவேயும் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

# நாட்டின் உயர் பீடமான பாராளுமன்றம் இன்று கேடிகளின் கூடாரமாகிவிட்டது!

## அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர் சீற்றம்

நாட்டின் அதியுயர் பீடமான பாராளுமன்றம் இன்று கேடிகளின் கூடாரமாகி விட்டது. பாராளுமன்றத்தில் தற்போது நடைபெறும் சில விடயங்களை எம்மால் ஒருபோதும் அனுமதிக்க முடியாது என அஸ்கிரியபீடமகாநாயக்கதேரோ உடுகம ஸ்ரீ புத்திரகித்த கூறினார்.

நேற்று முன்தினம் மாலை உடுநுவர டி.பி விஜயதுங்க மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இப்பிரதேச பௌத்த அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பாராளுமன்றத்தில் ஒழுக்கம் இன்று பெரிதும் சீரழிந்த நிலையிலுள்ளது. குற்றச் செயல்கள்புரிவோரை ஆதரிக்கும் நபர்களை மக்கள் ஒருபோதும் தங்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கக் கூடாது . குற்றச்செயல் புரிவோர் தம்மை ஆதரிக்கும் பாராளுமன்றப் பிரதிநிதிகளின் ஆதரவைப் பயன்படுத்தி கிராமப் புறங்களில் வன்செயல்களில் ஈடுபடுகின்றார்கள். பாராளுமன்றத்தில் அடிதடியில் இறங்குபவர்களைப் பற்றி என்ன கூறுவதென்றே தெரியவில்லை.

இத்தகைய ஒழுக்கச் சீர்கேடானவர்களைத் தெரிவு செய்து பாராளுமன்றத்துக்கு அனுப்பாதிருப்பதற்கான வழிவகைகளை மக்களே செயற்படுத்த வேண்டும்.இத்தகையோர் உங்களிடம் வாக்குக் கேட்டு வரும் போது விரட்டியடியுங்கள் என்றும் இவர் கூறினார்.

# சம்பள உயர்வு கோரிக்கைக்கு அமைச்சர் பலத்த கண்டனம்

(கொழும்பு)

டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் வழங்கப்பட்ட நிதி உதவியைப் பயன்படுத்தி அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்கவேண்டும் என சில அரசியல் சக்திகள் கருத்து வெளியிட்டமைக்கு அமைச்சர் பந்துல குணவர்த்தன தீவிர கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் கருத்துத் தெரிவிக்கையில்: நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மாத்திரமே அந்நிதி வழங்கப்பட்டுள்ளது . அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பிற்குச் செலவிட முடியாதெனவும் கூறியுள்ளார்.

# பலாலி ஆசிரியர் கலாசாலை; முல்லை, கிளி. யில் தெரிவானோர்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து பலாலி ஆசிரிய கலாசாலைக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம் வெளியாகியுள்ளது. இவர்களை கலாசாலையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

பலாலி ஆசிரியர் கலாசாலைக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் விபரம்:

உடற்கல்வி பாடநெறி:

செல்வி.அஜந்தா தனபாலசிங்கம் இலுப்பைக்கடவை அ.த.க. பாடசாலை, செல்வி.வளர்மதி நடராசா, மல்லாவி மத்திய கல்லூரி, திரு.குமாரசாமி நிரஞ்சன், பூவரசங்குளம் ம.வி, குமாரசாமி சுகுமார், பூநகரி ம.வி,

ஆங்கிலம்:

அருட்சகோதரி.செல்வரட்ணம் சீமான்-ஜெயபுரம் அ.த.க.பா, திருமதி.பா.திருமகள்-மல்லாவி மத்திய கல்லூரி,

றோமன் கத்தோலிக்கம்:

இராஜசிங்கம் விஜயகுமார் புதுக்குடியிருப்பு ம.வி, செல்வி. ரேணுகா நல்லதம்பி புதுக்குடியிருப்பு றோ.க, சிவஞானலிங்கம் சுதாகர், தண்டுவான் அ.த.க.பா, அருணகிரிநாதன் ஜெயநிமலன், பெரியகுளம் ஐயனார் வித்தியாலயம், சுந்தரலிங்கம் பிறேம்குமார், வள்ளிபுனம் அ.த.க.பா, செபஸ்தியன் சுரேஸ், பண்டாரிக்கண்டல் அ.த.க.பாடசாலை, இராமசாமி ஜெயப்பிரகாசம், வன்னேரி ம.வி, குலசிங்கம் ஜெயகாந்தன், புனித பற்றிமா றோ.க.வித்தியாலயம், திருமகள் லோகேஸ்வரன் இராமநாதபுரம், ம.வி,

விஞ்ஞானக்கல்வி:

சிவலிங்கம் ஜெயரூபன், கிளி.செல்லையாதீவு, அ.த.க.பா, தாமோதரம்பிள்ளை மங்களரூபன், தேவிபுரம் அ.த.க.பா, கனகரெட்ணம் இந்திரா, சுதந்திரபுரம் அ.த.க.பா,

மேறப்டி மாணவர்களுக்கான வகுப்புக்கள் எதிர்வரும் 01.07.2003 அன்று பலாலி ஆசிரிய கலாசாலையில் ஆரம்பமாக இருப்பதால் அனைவரும் கலாசாலையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# வவு.வில் 120 குடும்பங்கள் மீளக் குடியேற நடவடிக்கை!

வவுனியா மாவட்டத்தில உயர் பாதுகாப்பு வலயத்திற்கு அருகாமையில் இடம்பெயர்ந்த மக்களைக் குடியமர்த்தும் நடவடிக்கையின் முதற் கட்டமாக ஓமந்தை, வேப்பங்குளம், அரச முறிப்பு ஆகிய கிராமங்களில் 120 குடும்பங்கள் குடியமர்த்தப்படவுள்ளதாக மாவட்ட அரச அதிபர் கணேஸ் தெரிவித்துள்ளார்.

அரச முறிப்புக் கிராமத்தில் மீள்குடியேற விருப்பம் தெரிவித்துள்ள 69 குடும்பங்களுடன் அரச அதிகாரிகளும் நேற்று முன்தினம் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டுள்ளனர்.

1997 ஆம் ஆண்டுஜெயசிக்குறு நடவடிக்கையின் காரணமாக இடம்பெயர்ந்த இக்கிராம மக்கள் ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் தமது சொந்தக் கிராமத்தில் தற்போது மீள் குடியமர விருப்பம் தெரிவித்துள்ளனர்.

## கொள்ளை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரில் உள்ள வீடொன்றில் நகைகள், பணம் என்பன களவாடப்பட்டன.

நேற்று முன்தினம் வர்த்தகரான, தம்பித்துரை நந்தன் என்பவரது வீட்டினுள் புகுந்த திருடர்கள் உடுப்புப் பெட்டி ஒன்றில் இருந்த ஒரு லட்சத்து ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட பெறுமதியுடைய பணம், நகை என்பன வற்றை களவாடிச் சென்றுள்ளதாகத் தெரியவருகின்றது. (20

## யசுசி அகாஷி கொழும்பு விஜயம்

(கொழும்பு)

விசேட சமாதானத் தூதுவர் யசுசி அகாஷி அடுத்த வாரம் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளதாக ஜப்பான் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சனாதிபதி சந்திரிகா ஆகியோரைச் சந்தித்து தற்போதைய அரசியல் நிலை தொடர்பாக ஆராயவுள்ளார்.

### கொழும்பில்...

திகளும் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தப்பட்டுள்ளன. அத்தோடு கொழும்பு உட்படகல்கிசை,தெஹிவளை,கொகுவல,நுகெகொட ஆகிய பொலிஸ் நிலையங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

### பிரதமரின்...

உறுமய தலைமைச் செயலாளர் திலக் கருணாரட்ண கூறியுள்ளார்.

தற்போது லண்டனில் நடைபெறுகின்ற சந்திப்புக்களின் பின்னர் புலிகள் மீண்டும் பேச்சுவார்த்தைகளில் புது உத்வேகத்துடன் கலந்துகொள்வர் எனக் கூறியுள்ளார். இதுவரை இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளின் மூலம் புலிகள் தமக்குத் தேவையானவற்றைப் பெற்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். இதன் மூலம் புலிகளின் ஈழக் கனவு நிறைவேறி வருவதாகவும், அவர் மேலும் கூறியுள்ளார்.

# அனுமதியட்டை நடைமுறையை நீக்கப் படையினர் சம்மதம்

## -நயினை நாகபூசணி அம்மன் உற்சவம்-

## -படகுச் சேவைக்குப் பல நிபந்தனைகள்

நயினை நாகபூசணி அம்பாள் ஆலயத்தைத் தரிசிக்கச் செல்வோருக்கு அனுமதி அட்டை நடைமுறையை நிறுத்துவதற்கு படையினர் சம்மதித்துள்ளனர்.

நேற்று முன்தினம் வேலணைப் பிரதேச செயலர் தலைமையில் மேற்படி ஆலய மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இம் முடிவு எடுக்கப்பட்டது.

இதேவேளை, இவ்வாலயத் திருவிழாவுக்குப் படகுச் சேவைகளை நடைமுறைப்படுத்த அனுமதி வழங்குவதற்கு அனுமதித்த படையதிகாரி அப்படகுகளை மேற்பார்வைசெய்ய கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

சேவையில் ஈடுபடும் படகுகள் அனுமதிப் பத்திரங்கள் வைத்திருக்க வேண்டும் என்றும் படகுகளின் நிறங்கள் மாற்றப்படக்கூடாது என்றும் படையினர் தெரிவித்துள்ளனர்.

இம்மாதம் 29ம் திகதி தொடங்கி 14 ஆம் திகதி முடிவடையும் இத் திருவிழாக் காலப்பகுதியில் இப்பயணிகள் படகுச் சேவையை வழங்க அனுமதி வழங்கிய படையதிகாரி இரவு 12 மணிவரையும் படகுச் சேவையை அனுமதித்துள்ளார்.

இதேவேளை, யாழ்.நகரிலிருந்து 1/2 மணித்தியாலத்திற்கு ஒரு பேருந்துச் சேவையும், சகல தங்குமிட வசதிகளும் செய்து கொடுக்கப் படவும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் சம்மதித்துள்ளார்கள். (33)

### கொழும்பிற்கு...

வசூலிக்க முயன்றுள்ளனர்.

இந்தச் செய்தியை அறிந்த வவுனியா அரசியல்துறையினர் சம்பவ இடத்துக்குச் சென்று சிறுவனை மீட்டு போராறிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

### தமிழர்களின்...

ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ் வீதிகள் எங்கும் அலங்கார வளைவுகளும் சிவப்பு மஞ்சல் கொடிகளும் எழுச்சி கோசங்கள் தாங்கிய பதாதைகளும் தொங்க விடப்பட்டுள்ளதுடன் தமிழீழ எழுச்சிப் பாடல்களும் ஒலித்தவண்ணம் உள்ளன.

இதனை முன்னிட்டு யாழ். நகர வீதிகள் எங்கும் எழுச்சிகொள்ளத் தக்க வகையில் காணப்படுகின்றன. இது மக்களின் உணர்வை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இதேவேளை, தமிழரின் குரலையும் அவர்களின் இயல்பான வாழ்வின் கோரிக்கைகளையும் உலகெங்கும் ஒலிக்கவிட இருக்கும் இந்நிகழ்விற்கு பல அமைப்புக்களும் ஆதரவு தெரிவித்துள்ளதுடன் ஆரம்ப ஏற்பாடுகளிலும் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டு வருகின்றன.

அந்த வரிசையில் இந்துகலாசார அமைச்சு ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஸ் அணி மற்றும் பொது அமைப்புக்கள் மனிதநேய அமைப்புக்கள். வர்த்தக சங்கங்கள், துவிச்சக்கர வண்டிகளின் சங்கங்கள், விவசாய அபிவிருத்திச் சங்கங்கள், மாணவர் அமைப்புக்கள், என தம் ஆதரவை தெரிவித்து அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளன.

இத்துடன் இந்நிகழ்விற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சனாதிபதி சந்திரிகா ஆகியோர் உட்பட வெளிநாட்டு பிரதிநிதிகள், வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்கள் மற்றும் தமிழீழ ஆதரவாளர் ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தமிழீழ மாணவர் பேரவையினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தென்னிலங்கை மற்றும் சர்வதேச ஊடகங்களுக்கும் இந்நிகழ்விற்கான அழைப்புக்கள் விடப்பட்டுள்ளன. (33)

### அரசாங்க...

புலப்படுகிறது என்றும் தெரிவித்த அவர் நாட்டு மக்களின் பாதுகாப்புக் குறித்துக் கவனம் செலுத்தாத அரசாங்கம் தனிநபர்கள் கொல்லப் படுவது குறித்தும் முறையான விசாரணைகளை நடத்துவதுமில்லை என்றும் கூறினார்.

### குற்றச்சாட்டின்...

முதலாம் திகதியும் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதியுமடங்கிய காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் 50 பேருடன் காரைநகர் படைத் தளம் மீது தாக்குதல் நடத்தி படையினரைக் கொலைசெய்ததாகச் சட்டமா அதிபர் குற்றப் பத்திரிகைதாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### கடற்படையின்..

கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

சம்பவதினமான நேற்று முன்தினம் இரவு எட்டு மணியளவில் சம்பவ இடத்துக்கு வந்திறங்கிய ஏராளமான கடற்படையினர் கடற்கரையில் அதிகாலை தொழிலுக்கு செல்வதற்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இழுவைப்படகுகள் மற்றும் கலங்களைத் தீவிரமாக சோதனையிட்டதுடன் வலைகளையும் சின்னாபின்னப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அன்று மீனவர் தொழிலுக்கு செல்லாததுடன் பதற்றமான சூழ்நிலையே நிலவியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (33)


## சாவு அறிவித்தல்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் இல. 08ஆம் வாய்க்கால் உருத்திரபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட

### செல்லையா சேதுப்பிள்ளை

25-06-2003 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி சின்னம்மா அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், சரஸ்வதி அன்னலட்சுமி, சரோஜினி தேவி, பத்மநாதன், தில்லைநாதன், சத்தியதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கந்தையா, சுப்பிரமணியம், தேவதாஸ், இராசேஸ், யோரானி ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 26-06-2003 வியாழக்கிழமை இன்று பி.ப. 4.00 மணிக்கு தகனக் கிரிகைக் காக உருத்திரபுரம்இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என் பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

முகவரி:-
உருத்திரபுரம்,
கிளிநொச்சி

(3404)

தகவல்:-
மருமகன்-ச.தேவதாஸ்



## சாவு அறிவித்தல்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சி 7ஆம் யூனிற் முருகன் வீதியில் வசித்து வந்தவருமான

### நடேசு கோமளம்

அவர்கள் 25-06-2003 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு நடேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நா.மணி, பசுபதி, நாகமுத்து, பூமணி, நல்லம்மா, நாகேந்திரம், தியாகராசா, குழந்தை மற்றும் இராசம்மா, கண்ணம்மா, அருமைத்துரை, மணியம், ஆகியோரின் சகோதரியும் சத்தியபாமா(சமநலசேவை நிலையம் வட்டக்கச்சி), தேவகி (சுவிஸ்), பகீரதி (சுவிஸ்), ஜெயசீலன் (வட்டக்கச்சி), கிருபாவதி (இராமநாதபுரம்), சிவானந்தி (இராமநாதபுரம்), ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேந்திரம் (கண்டாவளை), தியாகலிங்கம் (சுவிஸ்), உதயகுமார் (சுவிஸ்), சுதன் (வட்டக்கச்சி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மற்றும் குமணா (சுவிஸ்), ராயூ (சுவிஸ்), நிமான் (சுவிஸ்), ஜெஞ்சியா (சுவிஸ்) கரீா (வட்டக்கச்சி) கீர்த்தனா (வட்டக்கச்சி) மனா (வட்டக்கச்சி), துர்க்கா (வட்டக்கச்சி), ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 26-06-2003 வியாழக்கிழமை பி.ப.2 மணிக்கு நடைபெற்று வட்டக்கச்சி, கல்மடு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(3403)

தகவல்
ஜெயசீலன்
(அன்பு மகன்)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூன் மாதம் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.